## கால்நடை பராமரிப்பு, பால்வளம்,
## மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# பால்வளம்

கொள்கை விளக்கக் குறிப்பு
**2024–2025**

மானியக் கோரிக்கை எண்.8

**த. மனோ தங்கராஜ்**
பால்வளத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.

# பொருளடக்கம்


| வ எண் | பொருள் | ப. எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1–3 |
| 2 | பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை | 3–13 |
| 3 | தமிழ்நாட்டில் பால் கூட்டுறவு அமைப்புகள் | 13–14 |
| 4 | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் | 14–25 |
| 5 | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் | 25–37 |
| 6 | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் | 37–57 |

| | | |
|---|---|---|
| 7 | பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை | 57-72 |
| 8 | தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள் | 73-77 |
| 9 | திட்டங்கள் | 78-101 |
| 10 | மின்-ஆளுமை நடவடிக்கைகள் | 101-103 |
| 11 | பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் | 104-109 |
| 12 | பணியாளர் நலன் | 109-111 |
| 13 | நிலையான அபிவிருத்திக்கான நோக்கங்கள் | 111-113 |
| 14 | புதிய முயற்சிகள் மற்றும் நிறைவேற்றப்பட்ட சட்டமன்ற அறிவிப்புகள் | 114-123 |
| 15 | நிதி ஒதுக்கீடு | 123-126 |
| 16 | முடிவுரை | 127-128 |

# பால்வளத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2024–2025

## 1. முன்னுரை

பால் உற்பத்தி தொழில் ஊரக பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்திற்கு இன்றியமையாத பங்கு வகிக்கிறது. மேலும், பால் உற்பத்தியானது கிராமப்புறங்களில் உள்ள நிலமற்ற, சிறு குறு விவசாயிகள் மற்றும் பெண்களுக்கு வேலை வாய்ப்பினை அளிப்பதில் முதன்மை பங்காற்றுகிறது.

பால் உற்பத்தி தொழில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் நிலையான வருவாய் கிடைத்திட முக்கிய பங்காற்றுகிறது. பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகளின் அவசர தேவைகளுக்கான பணம் கிடைப்பதுடன், பால் உற்பத்தியின் மூலம் அவர்களின் குடும்ப ஊட்டச்சத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்படுகிறது.

ஊரக பகுதிகளில் உள்ள பெரும்பான்மையான நிலமற்ற விவசாயிகளின் வாழ்வாதாரம் அங்குள்ள

இயற்கை வளங்களை பயன்படுத்தி பால் உற்பத்தி தொழிலை மேற்கொண்டு வருவதன் மூலம் நடைபெறுகிறது.

இந்திய விவசாயத்துறையில் பால் உற்பத்தியானது பெரும்பங்கை ஆற்றுவதுடன் வெற்றிகரமான தொழிலாகவும் உள்ளது. மேலும் 2022–23–ம் ஆண்டில் 230.58 மில்லியன் டன் பால் உற்பத்தியுடன் இந்தியா உலக அளவில் பால் உற்பத்தியில் முதல் இடத்தில் உள்ளது.

2022–2023 ஆம் ஆண்டில் அதற்கு முந்தைய ஆண்டினை விட 3.83% பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்தியாவில் கடந்த 2022–2023 ஆம் ஆண்டில் தனி நபருக்கு கிடைக்கும் (per capita availability) பாலின் அளவு 459 கிராம் ஆக உள்ளது.

2023 ஆம் ஆண்டு கால்நடை பராமரிப்பு துறையின் புள்ளிவிவரப்படி, 2022–23 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 10.32 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்துள்ளது. இது நாட்டின் ஒட்டு மொத்த பால்

உற்பத்தியில் 4.47% ஆகும். தமிழ்நாட்டில் பால் உற்பத்தியானது 2021–22 ஆம் ஆண்டைவிட 2.07% அதிகரித்துள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் கடந்த 2019–20 ஆம் ஆண்டில் தனி நபருக்கு கிடைக்கும் (per capita availability) பாலின் அளவு 316 கிராமாக இருந்த நிலையில் இருந்து 2022–23 ஆம் ஆண்டில் 369 கிராமாக அதிகரித்துள்ளது.

## 2. பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை

தமிழ்நாட்டில் பால் உற்பத்தியினை ஒருங்கிணைக்கும் நோக்கில், கடந்த 1958 ஆம் ஆண்டு பால்வளத்துறை தொடங்கப்பட்டது.

கூட்டுறவுத் துறையிலிருந்து கடந்த 01.08.1965–ல் நிர்வாகம் மற்றும் சட்டரீதியான அதிகாரங்கள் பால்வளத்துறைக்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 1972 ஆம் ஆண்டில் நிறுவனங்கள் சட்டத்தின் (Companies Act) கீழ், துறையின் வணிக நடவடிக்கைகளை மேலாண்மை செய்யும் நோக்கில் தமிழ்நாடு பால் உற்பத்தி வளர்ச்சி கழகம் (TNDDC) உருவாக்கப்பட்டது.

1981 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு, பால் கூட்டுறவு துறையில் மூன்றடுக்கு பால் கூட்டுறவு முறையை பின்பற்றத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு பால் உற்பத்தி வளர்ச்சி கழகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதியப்பட்டுள்ள தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு மாற்றப்பட்டது.

பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறையின் ஆணையர்/இயக்குநர், பால் கூட்டுறவு சங்கங்களுக்கான பதிவாளராகவும், பால்வளத்துறையின் தலைமை அதிகாரியாகவும் செயல்பட்டு வருகிறார்.

## 2.1 பால்வளத்துறையின் இலக்குரை (Vision)

- மாநிலத்தின் பால் உற்பத்தியை அதிகரிக்க தொடர்ச்சியான மற்றும் மேம்படுத்தப்பட்ட திட்டங்கள் உருவாக்கி செயல்படுத்துதல்.
- பால் உற்பத்தியை பெருக்க தேவையான புத்தாக்க முயற்சிகள் மேற்கொள்ளுதல்.
- பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய விலையை வழங்குதல்.
- கிராமம் முதல் நகரத்திலுள்ள நுகர்வோர் வரை பால் தரம் உறுதி செய்யும் கொள்முதல் திறன் மேம்படுத்துதல்.
- பால் மற்றும் பால் பொருட்களின் பதப்படுத்துவதற்கான வலுவான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.
- நுகர்வோருக்கு அதி உன்னத தரத்தில் பால் பொருட்கள் வழங்குதலை உறுதி செய்தல்.
- பால் உற்பத்தியாளர்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார சுய பாதுகாப்பை உறுதி செய்தல்.

## 2.2 இயங்குரை (Mission)

### 2.2.1. கறவை மாடுகளின் உற்பத்தி திறனை அதிகரித்தல்:

- கறவை மாடுகளின் கன்று ஈனும் இடைப்பட்ட காலத்தைக் குறைத்தல்.
- சிறந்த செயல்திறனுக்கான இனங்களை மேம்படுத்தல்.
- கருவுறுதல் விகிதத்தினை அதிகரித்தல்.
- நியாயமான விலையில் சத்தான சமச்சீர் தீவனம் வழங்குதல்.

### 2.2.2. வெளிப்படையான பட்டுவாடா முறைகளை உறுதி செய்தல்:

- உடனடி ஒப்புகை சீட்டினை உற்பத்தியாளர்களுக்கு வழங்குதல்.
- பால் பணத்தை உற்பத்தியாளர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்துதல்.
- உயர்தர பாலுக்கு கூடுதல் கொள்முதல் விலை வழங்குதல்.

### 2.2.3. பால் பதப்படுத்தும் திறனை அதிகரிக்க:

- அதிநவீன மற்றும் ஆற்றல் திறன் கொண்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்.

**2.2.4. புதுமையான சிப்ப முறைகளை (Packaging) செயல்படுத்துதல்:**

- கவர்ச்சிகரமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த சிப்ப முறைகளை (Packaging) பயன்படுத்துதல்.
- பால் பொருட்களின் தரத்தை உறுதி செய்கின்ற சிப்பங்களை பயன்படுத்துதல்.

**2.2.5. ஒரு தொடர்ச்சியான குளிர் சங்கிலியை பராமரித்தல்:**

- மிக உயர்ந்த தயாரிப்பு தரத்தை உறுதி செய்வதற்கு பண்ணை வாயிலில் இருந்து நுகர்வோர் வரை குளிர் சங்கிலி முறையினை பயன்படுத்துதல்.

**2.2.6. பரந்துபட்ட பயிற்சிகளை வழங்குதல்:**

- நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பணியாளர்களுக்கு பயிற்சி அளித்து மனித வள திறனை மேம்படுத்துதல்.

- நவீன தொழில்நுட்பங்கள், அறிவியல் வளர்ச்சிகள் மற்றும் ஊட்டச்சத்து காரணிகள் குறித்து விவசாயிகளுக்குக் கற்பித்தல்.

- நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) பின்பற்றுவதை ஊக்குவித்தல்.

**2.2.7. பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை வளர்த்தல்:**

- பொருளாதார ரீதியாக சாத்தியமானதாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கணிசமான பங்களிப்பை வழங்கக் கூடியதாகவும் பால்வளத்துறையை உருவாக்குதல்.

## 2.3. பால்வளத்துறையின் நிர்வாகக் கட்டமைப்பு

தமிழ்நாடு அரசின் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் கீழ் பால்வளத்துறை செயல்பட்டு வருகிறது.

ஆணையர்/இயக்குநர் பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை அவர்கள் பால் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் என்ற முறையில், 1983ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகள் 1988ன் கீழ் வழங்கப்பட்டுள்ள

அதிகாரங்களின்படி, புதிய பால் கூட்டுறவு சங்கங்களைப் பதிவு செய்தல், செயலிழந்த சங்கங்களைப் புதுப்பித்தல், பால் கூட்டுறவு சங்கங்களை ஆய்வு செய்தல், தகராறுகளைத் தீர்த்தல், மூன்றடுக்கு சங்கங்களுக்கு நிர்வாகக் குழுவினைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்துதல், பொது மக்கள் நலன் கருதி உரிய அறிவுரைகள் வழங்குதல் போன்ற சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ஆணையர்/இயக்குநர், பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை அவர்களுக்கு அலுவலக மற்றும் நிர்வாக பணிகளில் உதவியாக ஒரு கூடுதல் பால் ஆணையர், ஒரு துணைப்பால் ஆணையர் (கூட்டுறவு), ஒரு துணைப்பதிவாளர் (தலைமையகம்) மற்றும் ஒரு துணைப்பதிவாளர் (சட்டப்பணிகள்) ஆகியோர் செயல்படுகின்றனர்.

மாவட்ட அளவில், 38 வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய 29 சரக அலுவலகங்கள்

துணைப்பதிவாளர் (பால்வளம்) அவர்களது தலைமையில் செயல்பட்டு வருகின்றன. மேலும் கூட்டுறவு சார் பதிவாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள் களப்பணியாளர்களாக சரக அளவில் பணிபுரிந்து வருகின்றனர்.

## 2.4. பால்வளத்துறையின் செயல்பாடுகள்

பால்வளத்துறை, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம், 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகள் 1988–ன் கீழ் புதிய பால் கூட்டுறவு சங்கங்களைப் பதிவு செய்தல், செயலிழந்த பால் கூட்டுறவு சங்கங்களை புதுப்பித்தல் / மறுமலர்ச்சி செய்தல், பால் கூட்டுறவு சங்கங்களை ஆய்வு செய்தல், கூட்டுறவு சங்க தகராறுகளை தீர்த்து வைத்தல், இணையம், ஒன்றியம் மற்றும் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்குரிய நிர்வாக குழுவிற்கு தேர்தல் நடத்துதல், அறிவுரைகள் வழங்குதல், தணிக்கை அறிக்கை மற்றும் தனி அறிக்கைகளின் மீது பொது நல நோக்கில் சட்ட

ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை செய்து வருகின்றது.

## 2.5. பால்வளத்துறையின் நோக்கங்கள்

- புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் பால் நுகர்வோர்கள் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குதல் மற்றும் பதிவு செய்தல்
- தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு மூலம் பால் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகத்தில் பால் உற்பத்தியாளர்களின் பங்களிப்பை உறுதி செய்தல்
- பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலுக்கு உரிய விலை வழங்குவதை உறுதி செய்தல்
- பால் கூட்டுறவு சங்கங்கள் இல்லாத பகுதிகளில் பால் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குதல்
- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் தரநிலைகளின்படி நுகர்வோருக்கு நியாயமான விலையில் பதப்படுத்தப்பட்ட பால் கிடைப்பதை உறுதி செய்தல்

- நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மூலம் பால் கூட்டுறவுகளின் நம்பகத்தன்மையினை உறுதி செய்தல்
- பால் உற்பத்தியாளர்கள் மற்றும் சங்க ஊழியர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குதல்
- பால் உற்பத்தியாளர்களுக்கு பல்வேறு சலுகைகள் மற்றும் ஊக்கத்தொகைகளை வழங்குதல்
- அமைப்புசாரா பால் உற்பத்தியாளர்களை கூட்டுறவு வரம்பிற்குள் கொண்டு வருதல்
- பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு தீவனம் மற்றும் சுகாதார சேவை போன்ற பல்வேறு சேவைகளை வழங்குதல்
- தொடக்க சங்கங்கள் அளவில், மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணைய அளவில் பல்வேறு பால் பண்ணை நடவடிக்கைகளில் சமீபத்திய புதிய

தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல்

## 3. தமிழ்நாட்டில் பால் கூட்டுறவு அமைப்புகள்

தமிழ்நாட்டில் 1981 ஆம் ஆண்டிலிருந்து "ஆனந்த் முறை" மூன்றடுக்கு பால் கூட்டுறவு அமைப்பு பின்பற்றப்பட்டு வருகிறது.

கிராம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், மூன்றடுக்கு அமைப்பின் அடிப்படை அமைப்பாக முதல் நிலையில் உள்ளது.

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மூன்றடுக்கு கூட்டுறவு அமைப்பில் மத்திய நிலையில் உள்ளது. மாவட்ட அளவில் அவற்றின் அதிகார எல்லையில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களாக உள்ளன.

மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் அனைத்து மாவட்ட

ஒன்றியங்களை உறுப்பினர்களாக கொண்டு செயல்பட்டு வரும் ஒரு உயர்நிலை அமைப்பாகும்.

**4. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள்**

மூன்று அடுக்கு கூட்டுறவு அமைப்பின் முதல் நிலையில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் கிராம அளவில் உருவாக்கப்படுகின்றன.

**4.1. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் பதிவு**

புதிய பால் கூட்டுறவு சங்கத்தை பதிவு செய்வதற்காக, குறிப்பிட்ட கிராமத்தில் வசிக்கும் குறைந்தபட்சம் 25 தகுதிவாய்ந்த நபர்கள், பால் கூட்டுறவு சங்கத்தை பதிவு செய்ய கோரி சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் துணைப்பதிவாளர் (பால்வளம்) அவர்களுக்கு விண்ணப்பத்தை அளிக்க வேண்டும்.

முதுநிலை ஆய்வாளர்கள் (பால்) அல்லது மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் விரிவாக்க அலுவலர்கள் கள ஆய்வை மேற்கொண்டு,

கறவைகளின் எண்ணிக்கை, அப்பகுதியில் உள்ள பால் உற்பத்தித் திறன், பாலின் தரம், இலாபம், பால் வழித்தடம் மற்றும் பயண நேரம் ஆகியன குறித்து ஆய்வு செய்வார்கள்.

மேலும், முன்மொழியப்பட்ட சங்கத்தின் விவகார எல்லை மற்றொரு பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தின் செயல்பாட்டு எல்லையுடன் ஒன்றுடன் ஒன்று குறுக்கிட கூடாது. இருப்பினும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் மற்றும் பெண்கள் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், பொது பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க விவகார எல்லைக்குள் அச்சங்கத்தின் பால் உற்பத்திக்கு எந்தவொரு குந்தகம் விளைவிக்காத வகையில் பதிவு செய்யப்படுகிறது.

சங்கம் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள பால் உற்பத்தியாளர்களிலிருந்து ஒரு முதன்மை அமைப்பாளர் நியமிக்கப்படுவார். மேலும்

உறுப்பினர்கள் அப்பகுதியை சார்ந்தவர்கள் என்பதற்கான குடியிருப்புக்கான ஆதாரம், உள்ளூர் கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் நிலுவையின்மைச் சான்று உள்ளிட்ட விவரங்களுடன் முதன்மை அமைப்பாளர் முழு வடிவில் முன்மொழிவை சமர்ப்பிக்க வேண்டும்.

அத்தகைய முன்மொழிவு கிடைத்ததும், முன்மொழிவு பெறப்பட்ட நாளிலிருந்து 120 நாட்களுக்குள் துணைப்பதிவாளர் (பால்வளம்) சங்கத்தை பதிவு செய்வார். எந்தவொரு குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி, முன்மொழிவு துணைப்பதிவாளர் (பால்வளம்) அவர்களால் 120 நாட்கள் கால எல்லைக்குள் திருப்பித் தரப்படாவிட்டால், அது பதிவு செய்யப்படவில்லை என்றாலும், துணைப்பதிவாளர் (பால்வளம்) அவர்களால், மேற்படி கால வரம்பின் கடைசி தேதியில் அத்தகைய சங்கம் பதிவு செய்யப்பட்டதாக கருதப்படும்.

**4.2. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள்**

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் செயல்பாட்டு எல்லைகளில் வசிக்கும் பால் உற்பத்தியாளர்கள் அச்சங்கத்தில் உறுப்பினராக தகுதி உடையவராவர்.

மகளிர் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில், சங்கத்தின் செயல்பாட்டு எல்லைகளில் வசிக்கும் பெண்கள் அச்சங்கத்தில் உறுப்பினராக தகுதி உடையவராவர்.

ஆதி திராவிடர் / பழங்குடியினர் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில், சங்கத்தின் செயல்பாட்டு எல்லைகளில் வசிக்கும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் அச்சங்கத்தில் உறுப்பினராக தகுதி உடையவராவர்.

**4.3. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகக் குழு**

ஒவ்வொரு தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும் சங்கத் தலைவரின்

தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகின்றன. நிர்வாகக் குழு தேர்தலில் போட்டியிட, பால் உற்பத்தியாளர்கள் அந்தந்த சங்கத்திற்கு ஒரு ஆண்டில் 300 லிட்டர் பாலை ஊற்றியிருக்க வேண்டும் அல்லது 120 நாட்கள் தொடர்ந்து பால் ஊற்றியிருக்க வேண்டும்.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழுவின் அமைப்பு

| வ.எண் | வகை | இயக்குநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பொது | 6 |
| 2. | பெண்கள் | 3 |
| 3. | ஆதி திராவிடர்/ பழங்குடியினர் | 2 |
| | **மொத்தம்** | 11 |

## 4.4. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள்

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்து மாவட்ட கூட்டுறவு

பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு வழங்குகின்றன.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு ஈவுத்தொகை, புரவுக்கான ஆதரவு தள்ளுபடி, போனஸ் போன்ற பலன்களை சங்கத்தின் இலாபத்திலிருந்து வழங்குகிறது.

சங்க உறுப்பினர்களின் கறவை மாடுகளுக்கு மருத்துவ சேவைகள், கால்நடை தீவனம் மற்றும் இதர உள்ளீடுகள் வழங்குவதை உறுதி செய்கிறது.

## 4.5. செயலிழந்த தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை புத்துயிரூட்டுதல்

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் முறையில்லா நிர்வாகம் மற்றும் இதர பிரச்சனைகளால், உறுப்பினர்கள் நீண்ட நாட்களாக பால் ஊற்றாமலிருந்தால் சம்பந்தப்பட்ட தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் செயலிழக்கிறது. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு

சங்கத்திற்கு உறுப்பினர்கள் பால் ஊற்ற ஆரம்பித்தவுடன் செயலற்ற சங்கம் புத்துயிர் பெறும்.

2023-24 ஆம் ஆண்டில், 84 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் செயலற்ற நிலையில் இருந்து புத்துயிர் பெற்று செயல்பாட்டுக்கு வந்துள்ளன.

தற்போது கிராம அளவில் 9,189 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | பொது | | ஆதி திராவிடர் | | பெண்கள் | | செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை | செயலிழந்த சங்கங்களின் எண்ணிக்கை | மொத்த சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | செயல்படும் சங்கங்கள் | செயலிழந்த சங்கங்கள் | செயல்படும் சங்கங்கள் | செயலிழந்த சங்கங்கள் | செயல்படும் சங்கங்கள் | செயலிழந்த சங்கங்கள் | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 1 | திருவள்ளூர் | 139 | 11 | 10 | 1 | 58 | 7 | 207 | 19 | 226 |
| 2 | காஞ்சிபுரம் | 53 | 4 | 7 | 0 | 28 | 2 | 88 | 6 | 94 |
| 3 | செங்கல்பட்டு | 122 | 19 | 9 | 0 | 109 | 12 | 240 | 31 | 271 |
| 4 | வேலூர் | 108 | 27 | 2 | 1 | 41 | 16 | 151 | 44 | 195 |
| 5 | ராணிப்பேட்டை | 90 | 19 | 7 | 1 | 28 | 8 | 125 | 28 | 153 |
| 6 | திருப்பத்தூர் | 38 | 7 | 1 | 0 | 2 | 1 | 41 | 8 | 49 |
| 7 | திருவண்ணாமலை | 400 | 78 | 15 | 41 | 168 | 0 | 583 | 119 | 702 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | விழுப்புரம் | 162 | 27 | 21 | 4 | 60 | 15 | 243 | 46 | 289 |
| 9 | கள்ளக்குறிச்சி | 237 | 24 | 17 | 6 | 37 | 12 | 291 | 42 | 333 |
| 10 | கடலூர் | 179 | 7 | 1 | 0 | 50 | 4 | 230 | 11 | 241 |
| 11 | கோயம்புத்தூர் | 264 | 37 | 2 | 0 | 65 | 13 | 331 | 50 | 381 |
| 12 | ஈரோடு | 417 | 31 | 1 | 0 | 80 | 8 | 498 | 39 | 537 |
| 13 | திருப்பூர் | 335 | 57 | 1 | 8 | 65 | 0 | 401 | 65 | 466 |
| 14 | தர்மபுரி | 218 | 44 | 1 | 1 | 33 | 7 | 252 | 52 | 304 |
| 15 | கிருஷ்ணகிரி | 156 | 44 | 1 | 1 | 41 | 11 | 198 | 56 | 254 |
| 16 | கரூர் | 127 | 20 | 2 | 0 | 20 | 7 | 149 | 27 | 176 |
| 17 | திருச்சிராப்பள்ளி | 318 | 30 | 3 | 6 | 46 | 0 | 367 | 36 | 403 |
| 18 | அரியலூர் | 63 | 8 | 2 | 1 | 27 | 7 | 92 | 16 | 108 |
| 19 | பெரம்பலூர் | 162 | 7 | 1 | 0 | 30 | 4 | 193 | 11 | 204 |
| 20 | திண்டுக்கல் | 169 | 51 | 8 | 4 | 22 | 1 | 199 | 56 | 255 |
| 21 | மதுரை | 480 | 158 | 7 | 1 | 175 | 49 | 662 | 208 | 870 |
| 22 | தேனி | 303 | 121 | 32 | 8 | 105 | 32 | 440 | 161 | 601 |
| 23 | தஞ்சாவூர் | 180 | 54 | 1 | 16 | 85 | 1 | 266 | 71 | 337 |
| 24 | திருவாரூர் | 29 | 6 | 1 | 0 | 18 | 7 | 48 | 13 | 61 |
| 25 | நாகப்பட்டினம் | 19 | 5 | 1 | 0 | 18 | 11 | 38 | 16 | 54 |
| 26 | மயிலாடுதுறை | 27 | 4 | 1 | 0 | 35 | 5 | 63 | 9 | 72 |
| 27 | புதுக்கோட்டை | 312 | 54 | 1 | 0 | 27 | 2 | 340 | 56 | 396 |
| 28 | சேலம் | 672 | 45 | 7 | 0 | 116 | 5 | 795 | 50 | 845 |
| 29 | நாமக்கல் | 431 | 47 | 3 | 0 | 53 | 17 | 487 | 64 | 551 |
| 30 | சிவகங்கை | 304 | 71 | 2 | 0 | 70 | 13 | 376 | 84 | 460 |
| 31 | இராமநாதபுரம் | 119 | 16 | 3 | 0 | 16 | 1 | 138 | 17 | 155 |
| 32 | நீலகிரி | 88 | 5 | 1 | 0 | 5 | 0 | 94 | 5 | 99 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 33 | திருநெல்வேலி | 115 | 20 | 3 | 0 | 30 | 3 | 148 | 23 | 171 |
| 34 | தென்காசி | 55 | 14 | 4 | 0 | 7 | 4 | 66 | 18 | 84 |
| 35 | கன்னியாகுமரி | 52 | 4 | 1 | 0 | 1 | 1 | 54 | 5 | 59 |
| 36 | தூத்துக்குடி | 130 | 15 | 3 | 0 | 51 | 10 | 184 | 25 | 209 |
| 37 | விருதுநகர் | 71 | 27 | 6 | 2 | 34 | 9 | 111 | 38 | 149 |
| | **மொத்தம்** | 7144 | 1218 | 189 | 102 | 1856 | 305 | 9189 | 1625 | 10814 |

## 4.6. பால் கொள்முதல்

கிராம அளவில் 9,189 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் 3.91 இலட்சம் உறுப்பினர்களிடமிருந்து 2023–2024 ஆம் நிதியாண்டில் கிராமப்புற மக்களின் தேவைக்கு உள்ளூர் விற்பனை செய்தது போக சராசரியாக மாவட்ட ஒன்றியங்களின் மூலம் நாள் ஒன்றுக்கு 28.30 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. தற்பொழுது, பால் உற்பத்தியாளர்களுக்கு உடனடி ஒப்புகைச்சீட்டு வழங்குதல், வங்கிகள் மூலம் கடன் உதவி பெற்று கறவை மாடுகள் கொள்முதல் செய்ததன் மூலமாகவும், உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு கால்நடை மருத்துவ சிகிச்சை மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டதாலும், தரமான கறவை மாட்டுத்தீவனம்

வழங்கியதாலும் மாவட்ட ஒன்றியங்களின் மூலம் 34.22 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் 14 ஜூன் 2024 அன்று எய்தப்பட்டுள்ளது. மேலும், பால் கொள்முதலை நாளொன்றுக்கு 40 லட்சம் லிட்டராக உயர்த்த தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**4.7 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்**

பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் நுகர்வோருக்கு பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்வதற்காக பதிவு செய்யப்பட்ட முதன்மை நிலை சங்கங்களாகும்.

நுகர்வோரின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்/மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிடமிருந்து பால் மற்றும் பால் பொருட்களை கொள்முதல் செய்து, பால் அட்டைகள் மூலம் சலுகை விலையில் விற்பனை செய்து வருகிறது. பால் நுகர்வோர் கூட்டுறவு

சங்கங்கள் மொத்த விற்பனையாளர்களாகவே கருதப்படுகின்றனர்.

மாநிலம் முழுவதும் 58 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், 48 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன.

பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகமானது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

**4.8. தணிக்கை**

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் கணக்குகள் நிதித்துறையின் கீழ் உள்ள பால் கூட்டுறவுகளின் தணிக்கை இயக்குநரக துறையால் தணிக்கை செய்யப்பட்டு, அதன் அறிக்கை ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

தணிக்கை அறிக்கையின் படி, இலாபத்தில் உள்ள சங்கங்களின் இலாபத் தொகையானது உறுப்பினர்களுக்கு பல்வேறு விதமான ஊக்கத்தொகையாக பகிர்ந்தளிக்கப்படுகிறது.

## 5. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்

மூன்றடுக்கு அமைப்பு முறையில் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமானது மத்திய நிலையில் உள்ளது.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்களாக உள்ளன.

தமிழகத்தில் தற்போது 27 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், சென்னை தவிர்த்து 37 வருவாய் மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

## 5.1. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் நிர்வாகக் குழு

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், தலைவர் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் நிர்வாகக் குழு தேர்தலில் போட்டியிட தகுதியுடையவர்கள்.

17 தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள், 2 இணைத்தெரிவு இயக்குநர்கள் மற்றும் 7 செயல் இயக்குநர்கள் உட்பட மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் இயக்குநர்கள் குழுவின் மொத்த எண்ணிக்கை 26 ஆகும்.

## மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் நிர்வாகக் குழுவின் அமைப்பு

| வ. எண் | இயக்குநர்கள் | இயக்குநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | **தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள்** | |
| 1 | பொது | 9 |
| 2 | பெண்கள் | 5 |
| 3 | ஆதி திராவிடர்/பழங்குடியினர் | 3 |
| | **இணைத்தெரிவு இயக்குநர்கள்** | |
| 4 | பால் பண்ணை தொழில்நுட்பம் அல்லது பால் பண்ணை பொறியியல் துறையில் அனுபவம் பெற்றவர் | 1 |
| 5 | கால்நடை மருத்துவ இயலில் அனுபவம் பெற்றவர். | 1 |
| | **செயல் இயக்குநர்கள்** | |
| 6 | தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்தின் பிரதிநிதி; | 1 |
| 7 | தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்தின் பிரதிநிதி | 1 |
| 8 | மத்திய கூட்டுறவு வங்கியின் பிரதிநிதி | 1 |
| 9 | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் பிரதிநிதி . | 1 |
| 10 | கால்நடை பராமரிப்பு இயக்குநர், அவர்களின் பிரதிநிதி; | 1 |
| 11 | சம்பந்தப்பட்ட துணைப்பதிவாளர் (பால்வளம்) | 1 |

| | | |
|---|---|---|
| 12 | சம்பந்தப்பட்ட மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பொது மேலாளர் | 1 |
| **மொத்தம்** | | **26** |

பொது பிரிவில் தேர்ந்தெடுக்கப்படும் 9 நிர்வாகக் குழு இயக்குநர்கள் ஆணையர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் 9 தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

## 5.2 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் செயல்பாடுகள்

- மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு பல்வேறு உள்ளீட்டு சேவைகளை வழங்கி வருகிறது
- ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன
- மாவட்ட அளவிலான திட்டங்களையும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன

- பால் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்கள்/ உறுப்பினர்களுக்கு சுத்தமான பால் உற்பத்தி மற்றும் செயற்கை கருவூட்டல் போன்றவற்றில் பயிற்சியும் அளித்து வருகின்றன
- பால் வழித்தடங்களை உருவாக்கி, தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் இருந்து பாலை கொள்முதல் செய்து அருகிலுள்ள மொத்த பால் குளிர்விப்பான் (பிஎம்சி)/ குளிர்விக்கும் மையம்/ பால்பண்ணைக்கு பாலை கொண்டு சேர்க்கின்றன
- மாவட்ட பால் பண்ணைகளில் பாலைப் பதப்படுத்தி நுகர்வோர்களுக்கு தேவையான பல்வேறு பால் வகைகள் விற்பனை செய்யப்படுகிறது
- மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஊற்றப்படும் பாலின் அளவு மற்றும் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் பாலுக்கான தொகையை வழங்குகிறது

- பால் கையாளும் திறனை அதிகரிக்க, புதிய உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளுதல்
- மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தங்களது பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி தேவை போக மீதமுள்ள உபரி பாலினை இணைய (TCMPF) பால் பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கின்றன
- மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், உறுப்பினர்கள் ஊற்றும் பாலின் அளவுக்கேற்ப அதன் உறுப்பினர் சங்கங்களுடன் ஈட்டும் லாபத்தை பல்வேறு விதமாக ஊக்கத்தொகையாக பகிர்ந்து கொள்கின்றன.

## 5.3 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் – சேவை மையங்கள்.

### 5.3.1. மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் பயிற்சி மையங்கள்

தூய பால் உற்பத்தி, சமச்சீர் தீவனம் வழங்கும் முறை, பசுந்தீவனப் பயிரிடுதல், கால்நடை மேலாண்மை

மற்றும் இனப்பெருக்கம், உற்பத்திச் செலவைக் குறைத்தல், போன்ற தலைப்புகளில் பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கு சங்க நிர்வாகம் மூலம் சுகாதாரமான பால் கொள்முதல், தரப்பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

இந்திய அரசின், பயிற்சி நிலையங்களை கண்காணிக்கும் குழுவால் (central monitoring unit) அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிலையங்கள், சேலம், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றன.

விழுப்புரம், வேலூர் மற்றும் மாதவரத்தில் உள்ள பயிற்சி மையங்கள், தேசிய பசுக்கள் இயக்கத்தின் (Rashtriya Gokul Mission) கீழ் ஒன்றிய அரசின் மூலம் ரூ.200.00 லட்சம் 100% மானியமாக பெறப்பட்டு மேம்படுத்தப்பட்டது.

மேற்கண்ட பயிற்சி நிலையங்கள் மூலம், 75,677 பால் உற்பத்தியாளர்கள் மற்றும் 6,521 பணியாளர்களுக்கு கறவை மாடு வளர்ப்பு, தூய பால் உற்பத்தி, கன்று வளர்ப்பு மற்றும் மலட்டுத்தன்மை நீக்கம் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.

**5.3.2. கால்நடை தீவன உற்பத்தி ஆலை, ஈரோடு**

கலப்பு தீவனமானது வளரும் கன்றுகள், கிடாரிகள், பால் வற்றிய பசுக்கள், பால் உற்பத்தி செய்யும் பசுக்கள் மற்றும் கருவுற்ற பசுக்கள் ஆகியவற்றிற்கு தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களையும் வழங்குகிறது. துரித உடல் வளர்ச்சி, உடல் பராமரிப்பு, பால் உற்பத்தி, இனப்பெருக்க திறன் மற்றும் கறவை மாடுகளின் நோய் எதிர்ப்பு திறனைப் பேணுவதற்கு கலப்பு தீவனம் அவசியமாகிறது.

தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்ட உதவியுடன் ரூ.340.00 இலட்சம் மதிப்பீட்டில் ஈரோடு தீவன ஆலையின் உற்பத்தித் திறன் 150 மெட்ரிக்

டன்னில் இருந்து 300 மெட்ரிக் டன் என்ற அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் கூடுதல் தீவன தேவையினைப் பூர்த்தி செய்ய விருதுநகர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தில் நாளொன்றிற்கு 50 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட தீவன ஆலையுடன், தஞ்சாவூர் மாவட்டம் புதுக்குடியில் நாளொன்றிற்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட தீவன ஆலை நிறுவ பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கடலூர் மாவட்டம் திட்டக்குடியில் நாளொன்றிற்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட தீவன ஆலை நிறுவ பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2023–2024 ஆம் ஆண்டில் ஈரோடு கால்நடை தீவன ஆலையில் 85,042 மெட்ரிக் டன் (79%) கால்நடை தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு இறுதிக்குள் ஆவின் கால்நடை தீவனத்தின் மொத்த உற்பத்தி நாளொன்றுக்கு 300

மெட்ரிக் டன் அளவிலிருந்து 900 மெட்ரிக் டன் ஆக அதிகரிக்கப்படும்.

பால் உற்பத்தியாளர்களின் உற்பத்தி செலவை குறைக்கும் வகையில் புது வகை தீவன முறையான Total Milk Ration (TMR) அறிமுகப்படுத்தப்படும்.

**5.3.3. தாது உப்புக் கலவை உற்பத்தி ஆலைகள்**

தாது உப்பு கலவையானது கறவை மாடுகளின் உடல் வளர்ச்சி, உடல் பராமரிப்பு, பால் உற்பத்தி, இனப்பெருக்க திறன் மற்றும் நோய் எதிர்ப்பு திறனை பேணுவதற்கு அவசியமாகும்.

நாளொன்றுக்கு தலா 12 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட 5 தாது உப்பு கலவை உற்பத்தி ஆலைகள் இயங்கி வருகின்றன. அந்தந்த பகுதிகளுக்கு ஏற்றவாறு (Area Specific) தாது உப்புக் கலவையினை உற்பத்தி செய்து பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கி வருகின்றன.

தாது உப்புக்கலவை உற்பத்தி விவரம் பின்வருமாறு.

| வ.எண் | தாது உப்புக் கலவை ஆலைகள் | உற்பத்தி (மெ.டன்) |
|---|---|---|
| 1 | ஈரோடு | 10627 |
| 2 | விழுப்புரம் | 4597 |
| 3 | தூத்துக்குடி | 3819 |
| 4 | திருச்சி | 4484 |
| 5 | கிருஷ்ணகிரி | 682 |

2023-24 ஆம் ஆண்டில் இந்த ஆலைகள் கால்நடை பராமரிப்புத் துறைக்கு 867.22 மெட்ரிக் டன் தாது உப்புக் கலவையை ரூ.5.09 கோடிக்கு விற்பனை செய்துள்ளது. மேலும், செறிவூட்டப்பட்ட சத்துக்களுடன் கூடிய புது வகையான தாது உப்புக்கலவை உற்பத்தி செய்து வழங்கப்படும்.

## 5.3.4. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் வாரியான பால் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)

| வ. எ ண் | ஒன்றியத்தின் பெயர் | பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் திறன் | | குளிரூட்டும் திறன் (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குளிர்விப்பு மையம் | | மொத்த பால் குளிர்விப்பு மையம் | | மொத்தம் |
| | | எ ண் | கை யாளும் அளவு | எ ண் | கை யாளும் அளவு | எ ண் | கை யாளும் அளவு | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 1 | 1,00,000 | 2 | 72,000 | 34 | 98,000 | 1,70,000 |
| 2 | விழுப்புரம் | 1 | 1,00,000 | - | 0 | 17 | 53,000 | 53,000 |
| 3 | கள்ளக்குறிச்சி | - | - | 1 | 1,00,000 | 28 | 82,000 | 1,82,000 |
| 4 | கடலூர் | - | - | 1 | 10,000 | 12 | 54,000 | 64,000 |
| 5 | வேலூர் | 1 | 1,50,000 | 2 | 80,000 | 31 | 1,05,500 | 1,85,500 |
| 6 | திருப்பத்தூர் | - | - | - | 0 | 9 | 34,000 | 34,000 |
| 7 | திருவண்ணாமலை | - | - | 2 | 1,50,000 | 86 | 2,65,000 | 4,15,000 |
| 8 | தர்மபுரி | - | - | 1 | 50,000 | 37 | 1,43,000 | 1,93,000 |
| 9 | கிருஷ்ணகிரி | 1 | 2,00,000 | 1 | 10,000 | 17 | 78,000 | 88,000 |
| 10 | சேலம் | 1 | 5,00,000 | 1 | 1,30,000 | 116 | 4,77,500 | 6,07,500 |
| 11 | நாமக்கல் | - | - | 2 | 1,00,000 | 22 | 53,000 | 1,53,000 |
| 12 | ஈரோடு | 1 | 3,00,000 | 2 | 35,000 | 53 | 2,49,000 | 2,84,000 |
| 13 | கோயம்புத்தூர் | 1 | 5,00,000 | 3 | 1,20,000 | 23 | 1,12,000 | 2,32,000 |
| 14 | திருப்பூர் | - | - | 2 | 1,10,000 | 41 | 1,98,000 | 3,08,000 |
| 15 | நீலகிரி | 1 | 50,000 | 1 | 10,000 | 5 | 9,000 | 19,000 |
| 16 | மதுரை | 1 | 5,00,000 | - | 0 | 78 | 2,11,000 | 2,11,000 |
| 17 | தேனி | - | - | 1 | 1,00,000 | 11 | 55,000 | 1,55,000 |
| 18 | திண்டுக்கல் | 1 | 30,000 | 2 | 40,000 | 27 | 95,500 | 1,35,500 |
| 19 | திருச்சி | 1 | 1,50,000 | 2 | 1,50,000 | 66 | 2,18,500 | 3,68,500 |

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் திறன் | | குளிரூட்டும் திறன் (நாளொன்றுக்கு சராசரி லிட்டரில்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண் | கையாளும் அளவு | குளிர்விப்பு மையம் | | மொத்த பால் குளிர்விப்பு மையம் | | மொத்தம் |
| | | | | எண் | கையாளும் அளவு | எண் | கையாளும் அளவு | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 20 | பாடாலூர் | 1 | 1,00,000 | - | 0 | - | 0 | 0 |
| 21 | கரூர் | - | - | 1 | 50,000 | 18 | 46,500 | 96,500 |
| 22 | தஞ்சாவூர் | 1 | 48,000 | 1 | 30,000 | 19 | 66,500 | 96,500 |
| 23 | புதுக்கோட்டை | 1 | 55,000 | - | 0 | 6 | 27,000 | 27,000 |
| 24 | சிவகங்கை | 1 | 50,000 | 1 | 10,000 | 16 | 68,000 | 78,000 |
| 25 | விருதுநகர் | 1 | 50,000 | 1 | 10,000 | 2 | 10,000 | 20,000 |
| 26 | திருநெல்வேலி | 1 | 1,00,000 | 2 | 80,000 | 3 | 15,000 | 95,000 |
| 27 | தூத்துக்குடி | - | - | 2 | 20,000 | 9 | 43,000 | 63,000 |
| 28 | கன்னியாகுமரி | 1 | 30,000 | - | 0 | - | 0 | 0 |
| | மொத்தம் | 18 | **30,13,000** | **34** | **14,67,000** | **786** | **2867000** | 43,34,000 |

## 6. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமானது மாநில அளவிலான 3 அடுக்கு கூட்டுறவு அமைப்பின் உச்ச அமைப்பாகும். இதில் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களும் உறுப்பினர்களாக உள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமானது தமிழ்நாடு கூட்டுறவு சட்டத்தின் கீழ் பதியப்பட்ட மாநில அளவிலான சங்கம் ஆகும்.

## 6.1 தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நோக்கங்கள்

- பால் உற்பத்தியாளர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக பால் உற்பத்தி, பால் பதப்படுத்துதல், பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை ஆகியவற்றின் வளர்ச்சிக்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல்

- பால் பண்ணை தொழில் மேம்பாடு மற்றும் விரிவாக்கத்திற்கான உரிய நடவடிக்கைகள், கறவை மாடுகளின் பாதுகாப்பு மற்றும் மரபுவழி திறன் முன்னேற்றத்தின் மூலம் பால் உற்பத்தியாளர்களின் பொருளாதாரம் மேம்படுத்துதல்

- தேவைப்படும் போது மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு

ஒன்றியங்களுக்கு பால் பொருட்களை கொள்முதல் மற்றும் விநியோகம் செய்ய தேவையான தொழில்நுட்பம், நிர்வாகம், நிதி போன்ற சேவைகளை வழங்குவதற்கு உதவிபுரிதல் மற்றும் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள அவசியம் ஏற்படும் பட்சத்தில் எந்தவொரு நிறுவனத்துடனும் ஒருங்கிணைந்து செயல்பட ஒப்பந்தம் மேற்கொள்ளுதல்

- புதிய சங்கங்கள் அமைக்க ஊக்குவித்தல் மற்றும் சங்க உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்

- பால் பொருட்கள் மற்றும் இதர பொருட்களை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அல்லது மற்ற ஆதாரங்கள் மூலம் கொள்முதல் செய்யும் போது மாவட்ட ஒன்றியங்கள் பாதிக்காதவாறு பாலை பதப்படுத்தி மற்றும் பால் பொருட்களை உற்பத்தி செய்து

ஆவின் என்ற வணிக பெயரில் விற்பனை மேற்கொள்ளல்

- பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு தேவையான கால்நடை மருத்துவ வசதி, செயற்கை கருவூட்டல் வசதி, கலப்பு தீவனம், தாது உப்புக் கலவை, காப்பீடு போன்ற பணிகளை மேற்கொள்ள தொடர்புடைய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு உதவுதல்

## 6.2 தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிர்வாகக் குழு

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமானது ஒரு தலைவர் தலைமையில், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிர்வாகக் குழு தேர்தலில் போட்டியிட மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்

ஒன்றியத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தகுதியுடையவர் ஆகிறார்கள்.

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிர்வாக குழுவின் அமைப்பின் விவரம் பின்வருமாறு

| வ. எண் | இயக்குநர்கள் | இயக்குநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | **தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள்** | |
| 1. | பொது | 11 |
| 2. | பெண்கள் | 6 |
| 3. | ஆதி திராவிடர்/ பழங்குடியினர் | 4 |
| | **இணைத்தெரிவு இயக்குநர்கள்** | |
| 4. | பால் பண்ணை தொழில்நுட்பம் அல்லது பால் பண்ணை பொறியியலில் அனுபவம் பெற்றவர். | 1 |
| 5. | தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திலிருந்து நிதித் துறையில் அனுபவம் பெற்றவர் . | 1 |
| | **செயல் இயக்குநர்கள்** | |
| 6. | தேசிய பால் பண்ணை வளர்சசி வாரியத்தின் பிரதிநிதி | 1 |
| 7. | கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவ வசதி இயக்குநரகத்தின் பிரதிநிதி | 1 |

| | | |
|---|---|---|
| 8. | துணை பால் ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டு ஆணையர் அலுவலகம் | 1 |
| 9. | இணையத்தின் நிர்வாக இயக்குநர். | 1 |
| மொத்தம் | | 27 |

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் நிர்வாக அலுவலகம் சென்னையில் உள்ள நந்தனத்தில் செயல்பட்டு வருகிறது.

## 6.3 தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் செயல்பாடுகள்

சென்னை மாநகர நுகர்வோர்களுக்கு தேவையான பால் வகைகளான நிலைப்படுத்திய பால், இருமுறை சமன்படுத்திய பால், சமன்படுத்திய பால் மற்றும் நிறைகொழுப்பு பால் ஆகியவற்றை மாதவரம், அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் பால் பண்ணைகளில் பதப்படுத்தி, சிப்பமிட்டு விநியோகம் செய்து வருகிறது. நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் நீட்டிக்கப்பட்ட சேமிப்பு காலமுள்ள பாலை (UHT Milk Long Shelf life) தயாரிக்கின்ற ஆலை சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் நிறுவப்பட்டுள்ளது. மதிப்பு கூட்டிய

பால் பொருட்களான ஐஸ்கிரீம், நொதிக்கப்பட்ட பால் பொருட்கள், இனிப்புகள், கார வகைகள், சாக்லேட் வகைகள் தயாரிக்கும் ஆலை அம்பத்தூரில் உள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் அம்மாபாளையத்தில் நாளொன்றுக்கு 20 மெட்ரிக் டன் பால் பவுடர் மற்றும் 12 மெட்ரிக் டன் வெண்ணெய் உற்பத்தி திறன் கொண்ட பால் பண்ணை மற்றும் பால் பவுடர் உற்பத்தி ஆலை அமைந்துள்ளது.

மதுரையில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் ஐஸ்கிரீம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைந்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களில் இருந்து சென்னை மாநகர நுகர்வோர்களுக்கு தேவையான பால் மற்றும் பால் பொருட்கள் தயாரிக்க தேவையான பாலை கொள்முதல் செய்து வருகிறது. சென்னை நகர பால் பண்ணைகள், அம்பத்தூர் பால் பொருட்கள் தயாரிக்கும் ஆலை, திருவண்ணாமலை பால் பவுடர் உற்பத்தி & பால்

பண்ணை மற்றும் மதுரை ஐஸ்கிரீம் தயாரிக்கும் ஆலை ஆகியவை இணை நிர்வாக இயக்குநரால் நிர்வகிக்கப்படுகிறது.

பால் மற்றும் பால் பொருட்களை தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்தல், சமநிலையான விநியோகத்தை பராமரிக்க, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மாதாந்திர பால் உற்பத்தி மற்றும் பால் விநியோக திட்டம் (Movement Plan) தயாரித்து கண்காணித்து வருகிறது. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் உற்பத்தியாகும் உபரியான பாலை அதே ஒன்றியத்திலோ, அல்லது மற்ற ஒன்றியங்களிலோ உருமாற்றம் செய்து தேவைப்படும் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கு வெண்ணெய் மற்றும் பால் பவுடர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது. மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் பால் பண்ணை சம்பந்தமான வளர்ச்சி திட்டங்களை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும்

கிராமப்புற பால் கூட்டுறவு சங்கங்களில் செயல்படுத்துவதற்கான தொடர்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் பால் பண பட்டுவாடாவிற்கான நிதி தொய்வு ஏற்படும் பொழுது அவற்றிற்கு நிதி உதவி வழங்கி வருகிறது.

ஈரோட்டில் உள்ள உறை விந்து குச்சிகள் விநியோக நிலையம் மற்றும் கறவை இன மேம்பாட்டு செயல் திட்ட (DIPA) அலகுகள் மற்றும் நீலகிரியில் உள்ள ஆவின் உறைவிந்து உற்பத்தி நிலையம் (NJ&SF) ஆகியவை இணையத்தின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

இணையத்தின் போக்குவரத்துப் பிரிவு மாதவரம் பால் பண்ணை வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இணையத்தின் 20 பால் டேங்கர்கள் (9KL x 8, 15KL x 12) மூலம் தினமும் 2.5 இலட்சம் லிட்டர் பால் மாவட்ட ஒன்றியங்களில் இருந்து இணைய பயன்பாட்டிற்காக கொண்டு வரப்படுகிறது. மேலும்,

வெண்ணெய், பால் பவுடர் மற்றும் ஐஸ்கிரீம் ஆகியவை மாவட்ட ஒன்றியங்களில் இருந்து விநியோகத்திற்காக கொண்டு வரப்படுகிறது. மேலும், இணைய வாகனங்களில் GPS செயலி மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. 220 தனியார் ஒப்பந்த பால் டேங்கர்கள் எதிர்வரும் காலங்களில் GPS செயலி மூலம் கண்காணிக்கப்படும்.

பால் பாக்கெட்டுகளை குளிர்ந்த வெப்பநிலையிலேயே பாதுகாக்க காப்பிடப்பட்ட (Insulated) வாகனங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

### 6.4. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் – சேவை மையங்கள்

#### 6.4.1. ஆவின் உறைவிந்து உற்பத்தி நிலையம், நீலகிரி

சங்க பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு செயற்கைமுறை கருவூட்டலுக்கு தேவையான உறைவிந்து குச்சிகளை உற்பத்தி

செய்வதற்காக உறைவிந்து உற்பத்தி நிலையம், நீலகிரியில் 1973–ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

ஜெர்சி, கலப்பின ஜெர்சி, ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் மற்றும் கலப்பின ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் ஆகிய காளை இனங்களில் இருந்து உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. பிறகு உறைவிந்து குச்சிகள் ஈரோட்டில் சேமிக்கப்பட்டு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

தற்போது, இப்பண்ணையில் 121 காளைகள் வளர்ப்பில் உள்ளன. அக்காளைகளில் 93 பொலிகாளைகளிடமிருந்து விந்து சேகரிக்கப்படுகிறது. இவற்றுள், இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு ஜெர்சி மற்றும் இரண்டு ஹோல்ஸ்டீன்–ஃப்ரீசியன் இன பொலிகாளைகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இப்பொலிகாளை பண்ணையில் ஒன்றிய அரசின் வழிகாட்டுதல்படி, உயிர் பாதுகாப்பு (Biosecurity measures) வழிமுறைகளை பின்பற்றி பொலிகாளைகள்

வளர்க்கப்பட்டு, தரமான உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் (2023-24) 15.67 இலட்சம் உறைவிந்து குச்சிகள் இப்பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அடுத்த ஆண்டில் 2024-25 ஆம் வருடம் இந்நிலையத்தில் 18.50 இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பண்ணை ISO 9001: 2015 என்ற தரசான்று பெற்ற நிறுவனம் ஆகும். மேலும், ஒன்றிய அரசின் உறைவிந்து நிலையங்களுக்கான தர ஆய்வு குழுவின் 'A' தர சான்றும் பெற்றுள்ளது.

### 6.4.2. உறைவிந்து குச்சிகள் விநியோக நிலையம், ஈரோடு

இந்திய அரசின் வழிகாட்டுதல்படி, உறைவிந்து குச்சிகள் விநியோக நிலையம், உறைவிந்து உற்பத்தி நிலையத்துக்குள்ளிருந்து செயல்படாமல் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி ஈரோட்டில் தனியாக செயல்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் (2023 – 24) 10.38 இலட்சம் பசு உறைவிந்து குச்சிகள் மற்றும் 0.20 இலட்சம் எருமை உறைவிந்து குச்சிகள் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

### 6.4.3. பொலிகாளைகளை தனிமைபடுத்தும் நிலையங்கள்

பொலிகாளைகளை தனிமைப்படுத்த இரண்டு தனிமைப்படுத்தும் நிலையங்களில் ஒன்று முன் தனிமைப்படுத்தும் நிலையம் (**Pre–quarantine**), ஆத்தூரிலும் மற்றொரு தனிமைப்படுத்தும் நிலையம் (**Quarantine**) ஈரோட்டிலும் செயல்படுகின்றன.

மரபுவழி திட்டம் மற்றும் கள பால் உற்பத்தி திறன் பதிவு திட்டங்கள் மூலம் பிறக்கும் சிறந்த மரபியல் திறனுள்ள காளைகள் மேற்கூறிய தனிமைப்படுத்தும் நிலையங்களில் வளர்க்கப்பட்டு, பின் உறைவிந்து உற்பத்தி நிலையம் நீலகிரி மற்றும் இதர

பொலிகாளைப் பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

**6.4.4. சிறந்த மரபியல் திறனுள்ள கிடாரி கன்றுகள் வளர்ப்பு நிலையம், கருமந்துறை, சேலம் மாவட்டம்.**

மரபுவழி திட்டம் மற்றும் கள பால் உற்பத்தி திறன் பதிவு திட்டம் மூலம் பிறக்கும் அதிக இனப்பெருக்க மதிப்பீடு உள்ள சிறந்த மரபியல் திறனுள்ள கிடாரி கன்றுகள் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு இந்நிலையத்தில் வளர்க்கப்படவுள்ளன.

இக்கிடாரிகளை சிறந்த மரபியல் திறனுள்ள காளையின் உறைவிந்து கொண்டு கருவூட்டல் செய்து பிறக்கும் காளை கன்றுகள் உறைவிந்து உற்பத்தி நிலையத்திற்கும், சிறந்த மரபுத்திறன் கொண்ட கிடாரி கன்றுகள் தேவைப்படும் பால் உற்பத்தியாளர்களுக்கு விலைக்கும் விற்கப்படும்.

### 6.4.5. கறவையின மேம்பாட்டு திட்ட செயல்பாடுகள் (DIPA), ஈரோடு

உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்ய உயர் மரபுத்திறனுள்ள சிறந்த பொலிகாளை கன்றுகளை உற்பத்தி செய்து அவற்றை உறைவிந்து நிலையங்களுக்கு விநியோகித்தல் இத்திட்ட பிரிவின் முக்கிய நோக்கம் ஆகும்.

இப்பிரிவின் கீழ், ஜெர்சி கலப்பின கள பால் உற்பத்தி திறன் பதிவு திட்டம் 2007 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தில் அதிக அளவில் பால் தரும் பசுக்கள் பதிவு செய்யப்பட்டு, அப்பசுக்களின் பால் உற்பத்தியினை தொடர்ச்சியாக 10 மாதங்கள் (மாத இடைவேளைகளில்) பதிவுசெய்யப்படுகிறது. அந்த பதிவுகளின் அடிப்படையில் சிறந்த மரபியல் திறன் உள்ள பசுக்கள் தேர்வு செய்யப்படுகிறது. இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட சிறந்த பசுக்களுக்கு சிறந்த மரபுத் திறன் உள்ள பொலிகாளைகளிடமிருந்து பெறப்பட்ட உறைவிந்து குச்சிகளை கொண்டு செயற்கை முறை

கருவூட்டல் செய்து உயர் மரபுத் திறன் உள்ள பொலிகாளை கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பின் மேற்கூறிய நோயற்ற பொலிகாளை கன்றுகள் கொள்முதல் செய்யப்பட்டு தனிமைப்படுத்தும் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இத்திட்டம் தற்போது சேலம், நாமக்கல், கரூர், தருமபுரி, ஈரோடு, கோவை, மதுரை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் (கள்ளக்குறிச்சி) ஆகிய ஒன்பது மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் ஒன்றிய அரசின் நிதி மூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை வழியாக நடைபெறுகிறது.

இதுவரை கள பால் உற்பத்தி திறன் பதிவு திட்டம் மூலம் 486 பொலிகாளை கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு ஆவின் உறைவிந்து உற்பத்தி நிலையம், ஊட்டி மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைக்கு, உறைவிந்து உற்பத்தி செய்வதற்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**6.4.6 மாநில மைய ஆய்வகம், மாதவரம்**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மூலமாக மாதவரத்தில் மாநில மைய ஆய்வகமானது, தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு, 16.08.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பூச்சிக் கொல்லிகளின் அளவு, நுண்ணுயிர் / நோய் எதிர்ப்பு மருந்துகள், கன உலோகங்கள் மற்றும் பூஞ்சைகாளான் நச்சு போன்றவற்றை கண்டறிய தேவையான உயர் தொழில்நுட்ப உபகரணங்களுடன் மாநில மைய ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது மாதவரத்தில் மாநில மைய ஆய்வகத்தை நிறுவியதன் மூலம் பால் மற்றும் பால் பொருட்களை வெளிப்புற ஆய்வகத்தில் சோதனை செய்வதற்கு ஆகும் செலவினம் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வாய்வகத்தில் அதிக எண்ணிக்கையிலான பால் மற்றும் பால் பொருட்களின் மாதிரிகள் பரிசோதிக்கப்படுவதால்,

நுகர்வோருக்கு சென்றடைகின்ற பாலின் தரம் மேலும் உறுதி செய்யப்படுகிறது. மாநில மைய ஆய்வகத்தில் கால்நடை தீவனம் மற்றும் தாதுகலவைகளும் அவற்றின் மூலப்பொருட்களின் தரமும் பரிசோதிக்கப் படுவதால், விவசாயிகளுக்கு தரமான கால்நடை தீவனம் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது.

ஆவின் மாநில மைய ஆய்வகம் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு மாதிரிகளின் தரத்தை ஆய்வு செய்து அறிக்கை அளித்ததின் வாயிலாக ரூ.75.00 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

1. மாவட்ட ஒன்றியங்களில் இருந்து பெறப்பட்ட பால் மற்றும் பால் பொருட்களின் மாதிரிகளில் FSSAI–இல் குறிப்பிடப்பட்டுள்ள தர அளவீடுகளை பரிசோதித்தல்.

2. ஒன்றியங்களின் கால்நடை தீவன மற்றும் தாது உப்பு கலவை தயாரிப்பு அலகுகளிலிருந்து பெறப்பட்ட இடுபொருட்கள் மற்றும் உற்பத்தி

செய்யப்பட்ட இறுதி பொருட்களின் தரத்தை பரிசோதித்தல்.

3. வெளி பால் பண்ணைகளிலிருந்து கொள்முதல் செய்வதற்காக சேகரிக்கப்பட்ட கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர், பால் பவுடர் மற்றும் வெண்ணை ஆகியவற்றை தர பரிசோதனை செய்தல்.

மேலும், ஆவின் மாநில மைய ஆய்வகம், மாதவரத்திற்கு தேசிய சோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வகங்களுக்கான அங்கீகார வாரியத்தின் (NABL) அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

### 6.4.7. ஆவின் திறன் மேம்பாட்டு மையம், மாதவரம்

மாதவரம் பயிற்சி மையம் 14.11.2022 அன்று முதல் தொடங்கப்பட்டு இணையம், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மற்றும் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு அவர்களின் துறை சார்ந்த 36 வகையான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. ஒன்றியங்களின் பால் உற்பத்தி மற்றும்

இடுபொருள் பிரிவு அலுவலர்களுக்கு கால்நடை ஊட்டச்சத்து, கால்நடை மேலாண்மை பயிற்சிகளும், பால் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி சிகிச்சை பயிற்சிகளும், இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் கணக்குப் பிரிவு, நிர்வாகப் பிரிவு, தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் விற்பனைப் பிரிவு பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம்–திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கப் பணியாளர்களுக்கு தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (2022–2023), (2023–2024) கீழ் பால் பகுப்பாய்வு கருவிகளை கொண்டு உடனடி ஒப்புகை சீட்டு வழங்குவது தொடர்பான பால் பரிசோதனை பயிற்சி வழங்கப்பட்டது.

கடந்த 2023-2024 ஆம் ஆண்டில் 858 ஒன்றிய மற்றும் இணைய பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. அவற்றில், 308 பணியாளர்களுக்கு தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டது.

மேலும் 2023-24ஆம் ஆண்டில் பல வகையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளுக்கு 191 எண்ணிக்கையிலான இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பிற பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 7. பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், ஆவின் எனும் வணிக பெயரில் தமிழ்நாடு முழுவதும் பால் மற்றும் பால் பொருட்களை பிற தனியார் நிறுவனங்களின்

விலையோடு ஒப்பிடுகையில் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது.

நுகர்வோரின் விருப்பத்தையறிந்து மாநிலம் முழுவதும் கீழ்காணும் பால் வகைகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

| வ.எண் | பால் வகைகள் | Fat % | SNF % |
|---|---|---|---|
| 1 | இருமுறை சமன்படுத்தப்பட்ட பால் | 1.5 % | 9.0% |
| 2 | சமன்படுத்தப்பட்ட பால் | 3.0% | 8.5% |
| 3 | டிலைட் பால் | 3.5% | 8.5% |
| 4 | நிலைப்படுத்தப்பட்ட பால் | 4.5% | 8.5% |
| 5 | ஆவின் கோல்ட் | 5.0% | 9.0% |
| 6 | நிறை கொழுப்புப் பால் | 6.0% | 9.0% |
| 7 | டீமேட் | 6.5% | 9.0% |

மாநிலம் முழுவதும் நுகர்வோர்களுக்கு ஆவின் பால் அனைத்து இடங்களிலும் எளிதில் கிடைக்கும் வண்ணம் மாதாந்திர பால் அட்டை, பாலகங்கள், மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே மாதாந்திர பால் அட்டைகள் மூலம் நுகர்வோருக்கு பால் விற்பனை செய்யும் ஒரே கூட்டுறவு நிறுவனம் ஆவின் ஆகும். இதன் மூலம்

பால் எளிதில் கிடைக்கப் பெறுவதால் நுகர்வோரின் பேராதரவை பெற்றுள்ளது. மாதாந்திர பால் அட்டை விலை அதிகபட்ச சில்லறை விற்பனை விலையை விட ரூ.1 முதல் ரூ. 14 வரை சலுகை விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

**இத்தகைய முயற்சிகளால், ஆவின் பால் விற்பனை அளவு அதிகரித்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் விற்பனை அளவு 3.45% அதிகரித்து நாளொன்றுக்கு 29.20 லட்சம் லிட்டரிலிருந்து 30.25 லட்சம் லிட்டராக அதிகரித்துள்ளது.**

இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்கள் மூலம் ஆவின் பால் பொருட்கள், நுகர்வோரின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தரமான முறையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

பாரம்பரியமிக்க பால் பொருட்களான நெய் மற்றும் வெண்ணெய் மட்டுமல்லாது ஐஸ்கிரீம், இனிப்பு வகைகள் மற்றும் சாக்லேட் போன்ற பல்வேறு பால் பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகிறது.

# ஆவின் பால் பொருட்களின் வகைகள்

| குக்கீஸ் & சாக்லேட் | ஹெல்த் மிக்ஸ் வகைகள் | நீட்டிக்கப்பட்ட காலமுள்ள பால் வகைகள் |
|---|---|---|
| • குக்கீஸ் (6 வகைகள்)<br>• பால் சாக்லேட்<br>• நட்டீஸ் சாக்லேட் | • பாதாம் மிக்ஸ்<br>• பாதாம்–பிஸ்தா மிக்ஸ்<br>• உலர்–நட் மிக்ஸ் | • UHT பால் – சமன்படுத்தப்பட்ட பிலெக்ஸி பேக் பால்<br>• நிலைப்படுத்தப்பட்ட பால் – டெட்ரா பேக் பிரிக்<br>• சமன்படுத்தப்பட்ட பால் – டெட்ரா பேக் பிரிக்<br>• நறுமண பால் – டெட்ரா /பாட்டில் |

| இனிப்புகள் | ஐஸ்கிரீம் வகைகள் | நொதியூட்டப்பட்ட பால் பொருட்கள் |
|---|---|---|
| • இனிப்பு கோவா<br>• பேரிச்சை கோவா<br>• மைசூர்பா<br>• குலோப்ஜாமுன் | • கப் ஐஸ்கிரீம்<br>• ஐஸ்கிரீம் பேமலி சிப்பம்<br>• பந்து ஐஸ்கிரீம்<br>• சாக்கோ பார் | • சுவையூட்டப்பட்ட யோகர்ட் (5 சுவைகள்)<br>• இனிப்பில்லாத யோகர்ட்<br>• தயிர்<br>• லஸ்ஸி |

| | | |
|---|---|---|
| • பால்பேடா<br>• ரசகுல்லா<br>• பிரிமியம் மில்க் கேக்<br>• குலோப்ஜாமுன் மிக்ஸ் | • மேங்கோ டூயட்<br>• பைனாப்பிள் டூயட்<br>• திராட்சை டூயட்<br>• 2 இன் 1 பார்<br>• ஸ்ட்ராபெர்ரி கோர்<br>• மேங்கோ கோர்<br>• சாக்கோ பீஸ்ட்<br>• பிரிமியம் வகை கப் ஐஸ்கிரீம்<br>• பிரிமியம் வகை ஸ்கூப் ஐஸ்கிரீம் (6 வகைகள்)<br>• சாக்லேட் கோன்<br>• வெனிலா கோன்<br>• குல்ஃபி பார்<br>• கசட்டா<br>• சுவையூட்டப்பட்ட குல்ஃபி பார் | • பாக்கெட் மோர்<br>• பிரிமியம் தயிர் கப்புகள்<br>• பாட்டில்களில் அடைக்கப்பட்ட மோர்<br>• புரோபயாட்டிக் தயிர்<br>• புரோபயாட்டிக் லஸ்ஸி<br>• மாம்பழம் & ஸ்ட்ராபெர்ரி சுவைகளில் யோகர்ட் பானம் |

ஆவின் பால் பொருட்களின் விற்பனை 2023–24ஆம் ஆண்டில் சுமார் ரூ. 523.48 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது

ஆவின் நிறுவனம் மாறிவரும் நுகர்வோரின் விருப்பத்திற்கேற்ப தொடர்ந்து புதிய பால் பொருட்களை சந்தைப்படுத்துவது மூலம் விற்பனை அளவை அதிகரித்துள்ளது.

பண்டிகை காலங்களில் பொது மக்கள் விரும்பும் சிறப்பு இனிப்புகளான நெய் பாதுஷா, நட்ஸ் அல்வா,

மோத்திபாக், காஜு பிஸ்தா ரோல் மற்றும் காஜு கத்லி, போன்ற சிறப்பு இனிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. 2023 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையின் போது சாதனை அளவாக ரூ. 128 கோடிக்கு இனிப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 7.1 விநியோக அமைப்பு

சென்னை மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்ய ஆவின் நிறுவனம் பின்வரும் சந்தைப்படுத்தும் தடங்களை கொண்டுள்ளது. இவ்விற்பனை தடங்கள் மூலம் ஆவின் நிறுவனத்தின் பால் மற்றும் பால் பொருட்கள் நுகர்வோர்களுக்கு தங்குதடையின்றி கிடைக்க வழிவகை செய்துள்ளது.

மேலும் விற்பனை சந்தைப்படுத்தும் தடங்களை வலுப்படுத்தும் நோக்கில் புதிய மொத்த விற்பனையாளர்களை நியமித்து பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது. இதன்

தொடர்புடைய நியமன படிவம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 7.2 விற்பனை அதிகரிப்பு நடவடிக்கைகள் – சிறப்பு விற்பனை முகாம்கள்

இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் ஆவின் பால், பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க பல்வேறு சிறப்பு விற்பனை திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக ஆவின் சிறப்பு விற்பனை முகாம்கள் கடந்த 2023–24 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டு ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விளம்பரம் மற்றும் விற்பனை செய்யப்பட்டது.

**ஆவின் தினம்:**

பொதுமக்களிடையே ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் பால் கூட்டுறவு அமைப்பு மூலம் ஆவின் துவக்கப்பட்ட நாளான 01.02.1981 நாளினை ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 1 ஆம் தேதி

ஆவின் தினமாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி மாநிலம் முழுவதிலுமிருந்து சிறந்த பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, இதன் ஒரு பகுதியாக, பனிக்கூழ் உண்ணும் போட்டி, ஓவியப் போட்டி, சமையல் போட்டி என பல்வேறு வயதுப் பிரிவினரைக் கவரும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்வுகளின் போது, பொது மக்கள்/ பள்ளி/கல்லூரி பயிலும் மாணவ மாணவியர்கள் மற்றும் குழந்தைகள் அதிக அளவில் கலந்து கொண்டதை தொடர்ந்து நிகழ்வுகள் முக்கிய ஊடக நிறுவனங்களின் பரவலான கவனத்தை ஈர்த்தது.

**பேட்டரி வண்டிகள் மூலம் ஆவின் ஐஸ் கிரீம் விற்பனை**

கோடைக்காலத்தை முன்னிட்டு ஆவின் நிறுவனம் ஐஸ் கிரீம், தயிர், மோர், லஸ்ஸி போன்ற பொருட்களை விற்பனை செய்வதற்கு பல்வேறு ஏற்பாடுகள் செய்துள்ளது. அனைத்து ஆவின் பாலகங்கள், சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும்

மொத்த விற்பனையாளர்கள் மூலமாக இவ்வகை பால் பொருட்கள் நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும் சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும், பொதுமக்கள் அதிகம் கூடும் கடற்கரை, வழிபாட்டுத் தலங்கள், சுற்றுலா தலங்கள் போன்ற அனைத்து இடங்களிலும் ஆவின் ஐஸ் கிரீம் கிடைப்பதை உறுதி செய்ய 33 பேட்டரி வண்டிகள் மூலம் ஐஸ் கிரீம் விற்பனை செய்யப்பட்டுள்ளது .

**தொழிற் பொருட்காட்சி:**

சென்னை தீவு திடலில் நடைபெற்ற 48வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் ஆவின் நிறுவனத்தின் சார்பாக கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டு ஆவின் நிறுவனத்தின் பல்வேறு செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சி நிலைகள் கண்காட்சி அரங்கத்தில் காட்சிப்படுத்தப்பட்டது. அதன் ஒரு பகுதியாக விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு

ஆவின் பால் பொருட்களின் விற்பனை மேற்கொள்ளப்பட்டது.

**உணவுத் திருவிழா:** தீவு திடலில் நடைப்பெற்ற உணவுத் திருவிழாவில் ஆவின் சார்பாக விற்பனை அரங்கு அமைக்கப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், தற்காலிக விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் பாலகங்கள் மூலம் தொடர்ந்து பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆவின் பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை நடவடிக்கைகள் ட்விட்டர், ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் (@AavinTN) போன்ற சமூக ஊடகங்களிலும் ஆவின் அதிகாரப்பூர்வ இணையதளத்திலும் (www.aavin.tn.gov.in) விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றன.

**பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை மொத்த விற்பனையாளர்களாக நியமித்தல்:**

பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் நிதி ஆதாரங்களை பெருக்கவும், நிலையான அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்தவும் மற்றும் அனைத்து கிராமங்களில் ஆவின் பால் பொருட்கள் எளிதில் கிடைக்கும் வகையில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை மொத்த விற்பனையாளர்களாக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 2024–25 ஆம் ஆண்டில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக மாதம் ஒன்றுக்கு சுமார் ரூ.5 கோடி வரை ஆவின் பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**ஐஸ்கிரீம் மொத்த விற்பனையாளர்கள்:**

தமிழ்நாடு முழுவதும் அனைத்து சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் இதர விற்பனை

நிலையங்களிலும் ஆவின் ஐஸ்கிரீம் விற்பனையை துவக்கிடவும் மற்றும் ஐஸ்கிரீம் விற்பனையை உயர்த்திடவும் பிரத்தியேக ஐஸ்கிரீம் மொத்த விற்பனையாளர்களை நியமித்து விற்பனை துவங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஐஸ்கிரீம் விநியோகத்தை தமிழ்நாடு முழுவதும் எளிதாக கொண்டு சேர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எதிர் வரும் 2024–25 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தினை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சலுகை விலையில் ஆவின் உபபொருட்கள்:**

ஆவின் பால் உபபொருட்களான நெய், பன்னீர், ஐஸ்கிரீம் உள்ளிட்ட வகைகளுக்கு சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டும் தனியார் நிறுவனங்களின் விற்பனை விலையினை ஒப்பிட்டும் அவ்வப்போது சலுகை விலைகளில் விற்பனை செய்யப்பட்டது. மேலும் பண்டிகை காலங்களில் ஆவின் பால் உபபொருட்களின் வகைப்படுத்தப்பட்ட

திருவிழா தொகுப்பு பைகளில் (FESTIVE COMBO PACK) சலுகை விலையில் விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் ஆவின் பால் உபபொருட்களின் விழிப்புணர்வு பலமடங்கு அதிகரிக்கப்பட்டு விற்பனை உயர்த்தப்பட்டது.

**இணைய வழி ஆவின் பால் அட்டை விற்பனை:**

பொது மக்கள் தங்கள் இல்லங்களிலிருந்தே இணையதளம் வாயிலாக ஆவின் பால் அட்டையை விண்ணப்பிக்கவும் மற்றும் புதுப்பிக்கும் நடைமுறைகள் எளிதாக்கப்பட்டது. இந்த எளிய நடைமுறை மூலம் சுமார் 58650 பால் அட்டை விண்ணப்பங்கள் கடந்த ஜனவரி 2024 முதல் மார்ச் 2024 மாதம் வரை புதுப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த திட்டம் பொது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது மற்றும் மாதந்தோறும் புதிய இணைய வழி பால் அட்டை நுகர்வோர் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது.

## 7.3 மின்னணு மற்றும் இணையவழி வணிகம்

வளர்ந்து வரும், மின்னணு மற்றும் இணையவழி வணிகத்தில் ஆவின் நிறுவனம் தனது சந்தை மதிப்பை அதிகரிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. தற்போது ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை மதிப்பு மாதமொன்றுக்கு சுமார் ரூ.2 கோடி அளவில் மின்வணிக முறையில் பிக் பாஸ்கெட் (BIG BASKET), ஸ்விக்கி (SWIGGY), ஸோமாட்டோ (ZOMATO) ரிலையன்ஸ் (RELIANCE), ஜியோமார்ட் (JIOMART) பிலிங்க்கிட் (BLINKIT) மற்றும் ஸிப்டோ (ZEPTO) மூலம் சந்தைப்படுத்தியுள்ளது.

மேலும் ஆவின் நிறுவனம் பால் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான தேசிய பால் கூட்டுறவு விற்பனை தளத்தின் (NCDFI) இணைய வழி (e–PORTAL) மூலம் பால் பவுடர், நெய் மற்றும் வெண்ணெய் விற்பனை மேற்கொண்டு தேசிய அளவில் 2023–24 ஆம் ஆண்டில் இரண்டாவது இடத்தை பெற்றது.

## 7.4 பால் மற்றும் பால் பொருட்கள் ஏற்றுமதி

தரம் மற்றும் நம்பகத்தன்மைக்கு நற்பெயர் பெற்றுள்ள ஆவின் நிறுவனம் உலகெங்கிலும் நம்பிக்கைக்குரிய வர்த்தக நிறுவனமாக மாறியுள்ளதை தொடர்ந்து UHT (Ultra Heat Treatment) பால் மற்றும் நெய் போன்ற ஆவின் தயாரிப்புகள் கத்தார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், துபாய், இலங்கை, ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதியை மேலும் விரிவுபடுத்தும் வகையில், நெய் மற்றும் UHT பால் ஆகியவை பல்வேறுகட்ட ஆய்வக சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, நெய்யின் பயன்பாட்டு காலம் 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாகவும், UHT பாலின் பயன்பாட்டு காலம் 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களாகவும் நீட்டிக்கப்பட்டு முறையே அமெரிக்கா மற்றும் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. அனைத்து தொழில் விநியோகஸ்தர்களையும் ஊக்குவிக்கும் வகையில்

ஏற்றுமதி ஆய்வு கவுன்சில் வழங்கும் நெறிமுறைகளுக்கு உட்பட்டு ஆவின் உபபொருட்களை ஏற்றுமதி செய்ய ஆவின் நிறுவனம் வாய்ப்பளிக்கிறது.

**7.5 நுகர்வோர் சேவை மற்றும் ஆதரவு மையம்**

நுகர்வோர் நலன் மற்றும் சேவை மையம், கட்டணமில்லா தொலைபேசி வசதியுடன் (எண். 1800-425-3300) 24 மணிநேரமும், சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள ஆவின் தலைமை அலுவலகத்தில் இயங்கி வருகிறது. இதன் மூலம் நுகர்வோர் தங்களது கருத்துக்களை/குறைகளை பதிவு செய்து கொள்ளலாம். நுகர்வோரின் புகார்கள் மற்றும் குறைகளை முறையே துறை சார்ந்த அதிகாரிகளுக்கு உடனடியாக தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 48 மணி நேரத்திற்குள் நுகர்வோரின் குறைகளுக்கான தீர்வு காணப்படுகிறது. 2023-24-ல் மொத்தம் 39045 புகார்கள் பெறப்பட்டு உரிய தீர்வும் காணப்பட்டுள்ளது.

## 8. தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் மாநிலம் முழுவதும் உள்ள தர உறுதி செய்தல் ஆய்வகங்களானது, பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தினை உறுதி செய்வதற்கான அதிநவீன ஆய்வு கருவிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் (MPCS) / தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் (BMC) / குளிர்விக்கும் நிலையங்கள் (CC) / மாவட்ட ஒன்றிய பால் பண்ணைகள் (Union Dairies) / சென்னை பெருநகர பால் பண்ணைகளிலுள்ள (Metro Dairies) ஆய்வகத்தில், வேதியியல் மற்றும் நுண்ணுயிரியல் ரீதியாக பாலின் தரத்தை உறுதி செய்ய கீழ்கண்ட தர பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது.

| தர பரிசோதனை நிலைகள் | பரிசோதனைகள் |
|---|---|
| பால் கொள்முதல் சங்க அளவில் | 1. சுவை மற்றும் மணம் அறிதல் பரிசோதனை (Organoleptic Test) |

| தர பரிசோதனை நிலைகள் | பரிசோதனைகள் |
|---|---|
| | 2. கொழுப்புச்சத்து (Fat) (%) |
| | 3. கொழுப்பல்லாத இதர சத்துக்கள் (SNF) (%) |
| பால் குளிரூட்டும் நிலையம் & பால்பண்ணை அளவில் | 1. வெப்பநிலை |
| | 2. சுவை மற்றும் மணம் அறிதல் பரிசோதனை |
| | 3. கொதித்தலின்போது திரிதல் பரிசோதனை (COB) |
| | 4. மெத்திலீன் ஊதா நிறமாற்ற பரிசோதனை (MBRT) |
| | 5. அமிலத்தன்மை அறிதல் பரிசோதனை (Acidity) |
| | 6. கொழுப்புச்சத்து (Fat) (%) |
| | 7. கொழுப்பல்லாத இதர சத்துக்கள் (SNF) (%) |
| | 8. கலப்பட பரிசோதனைகள் |
| | 9. நோய் எதிர் மருந்துகள் (Antibiotics) பரிசோதனை |
| | 10. பூஞ்சைகாளான் நச்சு (Aflatoxin) பரிசோதனை |
| | 11. மொத்த நுண்ணுயிர் எண்ணிக்கை பரிசோதனை (Total Plate count) |

| தர பரிசோதனை நிலைகள் | பரிசோதனைகள் |
|---|---|
| | 12. கோலிஃபார்ம் (Coliform) பரிசோதனை |
| பால் பதப்படுத்தும் நிலையில் | 1. வெப்பநிலை |
| | 2. சுவை மற்றும் மணம் அறிதல் பரிசோதனை (Organoleptic Test) |
| | 3. கொதித்தலின்போது திரிதல் பரிசோதனை (COB) |
| | 4. கொழுப்புச்சத்து (Fat) (%) |
| | 5. கொழுப்பல்லாத இதர சத்துக்கள் (SNF) (%) |
| | 6. பாஸ்படேஸ் பரிசோதனை |
| | 7. அமிலத்தன்மை (Acidity) அறிதல் பரிசோதனை |
| | 8. சமசீர்தன்மை (Homogenisation Efficiency) அறிதல் பரிசோதனை |
| | 9. மெத்திலீன் ஊதா நிறமாற்ற பரிசோதனை (MBRT) |
| | 10. பாலின் வைப்பு நிலை தரம் அறிதல் பரிசோதனை (Keeping Quality) |

| தர பரிசோதனை நிலைகள் | பரிசோதனைகள் |
|---|---|
| | 11. மொத்த நுண்ணுயிர் எண்ணிக்கை பரிசோதனை (Standard Plate Count) |
| | 12. கோலிஃபார்ம் (Coliform) பரிசோதனை |
| **பால் மற்றும் பால் பொருட்களில் மேற்கொள்ளப்படும் காலமுறை பரிசோதனைகள் (Periodical Testing parameters of Milk & Milk Products)** | 1. பூச்சிக்கொல்லிகள் (Pesticide Residues)<br>2. நோய் எதிர் மருந்துகள் / கால்நடை மருந்துகளின் அளவு (Antibiotics/Veterinary Drug Residues)<br>3. அடர் உலோகங்கள் (Heavy Metals)<br>4. மெலமைன் (Melamine)<br>5. பூஞ்சைகாளான் நச்சு (Aflatoxin) பரிசோதனை |

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், பால் மற்றும் பால் பொருட்களின் உணவு பாதுகாப்பினை உறுதி செய்யும் விதமாக இணைய மற்றும் ஒன்றிய பால் பண்ணைகளில் உணவு பாதுகாப்பு மேலாண்மை அமைப்பிற்கான ISO: 22000 சான்றினை பெற்றுள்ளது.

| இணைய பால் பண்ணைகள் | ஒன்றிய பால் பண்ணைகள் |
|---|---|
| • அம்பத்தூர் பால் பண்ணை | • ஈரோடு ஒன்றியம் |
| • மாதவரம் பால் பண்ணை | • சேலம் ஒன்றியம் |
| • சோழிங்கநல்லூர் பால் பண்ணை | • மதுரை ஒன்றியம் |
| • பால் உப பொருட்கள் பால் பண்ணை, அம்பத்தூர் | • கோயம்பத்தூர் ஒன்றியம் |
| • பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை, திருவண்ணாமலை | |

இந்திய தர நிர்ணய ஆணையத்தின் (BIS) பால் மற்றும் பால் பொருட்களுக்கான இணக்க மதிப்பீட்டு திட்டத்திற்கான மேலாண்மை திட்ட (CAS) அங்கீகாரம் அம்பத்தூர் பால் உப பொருட்கள் பால் பண்ணைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இதர பால் பண்ணைகளில் இந்த அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 9. திட்டங்கள்

### 9.1 தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டம். (NPDD)

கிராம பகுதிகளில் பால் குளிர்விக்கும் கட்டமைப்பு வசதிகளை அதிகப்படுத்துதல், தரமான பாலை கொள்முதல் செய்தல், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய அளவில் பால் கொள்முதல், பால் பதப்படுத்துதல் மற்றும் பால் விற்பனை போன்றவற்றிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். 2022-2024 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் ரூ.9080.11 இலட்சம் (ஒன்றிய அரசின் பங்கு ரூ.6206.88 இலட்சம்) ஒன்றிய அரசால் ஒப்புதல் பெறப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தேசிய பால்வள மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் ஆவின் மாநில மைய ஆய்வகம் மாதவரத்தில் 16.08.2022 அன்று முதல் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.

- இவ்வாய்வகம் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (FSSAI) தர நிர்ணயத்துக்கு உட்பட்டு தரமான பாதுகாப்பான பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோர்களுக்கு உறுதி செய்யும் வகையில் பால் மற்றும் பால் பொருட்களின் மாதிரிகளை பரிசோதனை செய்ய மிகவும் துல்லியமான பகுப்பாய்வு திறன் கொண்ட LCMS, GCMS, ICPMS, பகுப்பாய்வு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது.

- மாதவரத்தில், நோய் கிருமி கண்டறிதல் மற்றும் நுண்ணுயிர் கண்டறியும் ஆய்வகம் அமைக்கும் பணி முடிவுற்றது. இந்த ஆய்வகம் மூலமாக இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பால் மற்றும் பால் பொருட்களின் அனைத்து அளவுருக்களையும் (Parameters) பரிசோதிக்க உதவுவதன் மூலம் ஏற்றுமதி தரத்திற்கு ஏற்றவாறு பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தினை

உறுதி செய்வதோடு உள்ளூர் சந்தைக்கும் விற்பனை செய்ய முடியும்.

- பால் மற்றும் பால் பொருட்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான ஆய்வகத்தை ரூ.11.58 கோடி மதிப்பில் அம்பத்தூரில் உள்ள பால் உபபொருட்கள் பால்பண்ணையில் நிறுவுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆய்வகத்தில் புதிய பால் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சி மற்றும் தற்போது விற்பனையில் உள்ள பால் பொருட்களின் தரமேம்பாடு ஆகியவை மேற்கொள்ளப்பட உள்ளது.

- தர பகுப்பாய்விற்காக ரூ.8.75 கோடி மதிப்பிலான இரசாயனங்கள், கண்ணாடி பொருட்கள் மற்றும் உபகரணங்கள் இத்திட்டத்தின் கீழ் மாவட்ட ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- மாவட்ட ஒன்றியங்களிலுள்ள பால் பண்ணைகளில் உணவு பாதுகாப்பு மேலாண்மை அமைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்காக சான்று பெறுதல் திட்டத்தின் கீழ் ரூ.3 கோடி நிதி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நிதியானது, பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தை உறுதி செய்யும், இந்திய தர நிர்ணய ஆணையத்தின் (BIS) இணக்க மதிப்பீடு திட்டம் (Conformity assessment Scheme) ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது.

- 2022-24 ஆம் ஆண்டில் 121 தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இதனால், 5,35,000 லிட்டர் பாலை கூடுதலாக குளிர்விக்க முடியும்.

- பால் சேகரிப்பு நிலையங்களில், பால் தரத்தினை உறுதி செய்ய, 2906 பால் பரிசோதனை கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு தொடக்க

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள்/தொகுப்பு பால் குளிர்விக்கும் நிலையம்/குளிர்விப்பு நிலையம்/பால் பண்ணைகளில் நிறுவப்பட்டு வருகிறது.

- மாவட்ட ஒன்றியங்களில் பால் கொள்முதல், பதப்படுத்துதல், விற்பனை போன்ற பணிகளை ஒருங்கிணைக்க தேவையான தகவல் தொழில் நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் மென்பொருள் மேம்படுத்தும் பணி இத்திட்டத்தின் கீழ் ரூ.14.19 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

- தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டம் 2023–2024–ன் கீழ் ரூ.2242.72 இலட்சம் (மத்திய அரசின் நிதி பங்கீடாக ரூ.1422.67 இலட்சம்) மதிப்பீட்டில் திட்டம் மத்திய அரசால் ஒப்புதல் பெறப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

- பால் சேகரிப்பு நிலையங்களில் பால் உற்பத்தியாளர்களுக்கு உடன் ஒப்புகைச் சீட்டு வழங்குவதற்கு 2804 எண்ணிக்கையிலான இணைய வழி வசதியுடன் பால் பகுப்பாய்வு கருவிகள் நிறுவப்படும்.

- தொகுப்பு பால் குளிர்விப்பான் மையங்களில் சுத்தமான மற்றும் சுகாதாரமான முறையில் சுத்தம் செய்வதற்கு 277 சூரியசக்தியில் இயங்கும் நீர் கொதிகலன்கள் வழங்கப்படும்.

- பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பால் அளவு மற்றும் தரத்தினை கிளவுட் அடிப்படையிலான கண்காணிப்பு மேற்கொள்வதற்கு 1464 மின்னணு எடை இயந்திரங்கள் மற்றும் 1926 இணையவழியில் தகவல் பெறுவதற்கான உபகரணங்கள் வழங்கப்படும்.

- நீலகிரி ஒன்றியத்தில் நிறுவப்படவுள்ள பாலாடைக்கட்டி தொழிற்சாலையில் நுகர்வோருக்கு தரமான பாலாடைக்கட்டி வழங்குவதற்கு ஏற்றவகையில் உணவு ஸ்கேன் ஆய்வக பகுப்பாய்வு கருவி நிறுவப்படும்.

**9.2 தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (NABARD–RIDF)**

- மாநில அரசு கூட்டுறவு பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (RIDF) கீழ் நிதி உதவி அளித்து வருகிறது.
- நபார்டு வங்கி நிதி 2021–22 தொகுப்பு – XXVII–ன் கீழ் ரூ.26.63 கோடி பெறப்பட்டு, திருப்பூர் மாவட்ட ஒன்றியத்தில் ரூ.3.485 கோடி மதிப்பிலான நிர்வாக கட்டிடம் நிறைவுற்று பயன்பாட்டில் உள்ளது. நாமக்கல் மாவட்ட ஒன்றியத்தில் ரூ.83.86 இலட்சம் மதிப்பீட்டில் விற்பனை அலுவலக கட்டிடம் நிறைவுற்று

பயன்பாட்டில் உள்ளது. மேலும் நாமக்கல் மாவட்ட ஒன்றியத்தில் நிர்வாக கட்டிட பணிகள் ரூ.6.18 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் நீலகிரி மாவட்ட ஒன்றியத்தில் 1 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட பாலாடைக்கட்டி ஆலை ரூ.13.14 கோடி மதிப்பீட்டிலும் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

- நபார்டு வங்கி நிதி 2022–23 தொகுப்பு – XXVIII–ன் கீழ், ரூ.150 கோடி மதிப்பீட்டில் பெரம்பலூர் மாவட்டம், பாடாலூரில் நாளொன்றுக்கு 6 இலட்சம் லிட்டர் பாலை கையாளும் திறன் கொண்ட பால் உபபொருட்கள் தயாரிக்கும் பண்ணையை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- நபார்டு வங்கி நிதி 2022–23 தொகுப்பு – XXVIII–ன் கீழ், தஞ்சாவூர் மாவட்டம் புதுக்குடியில் நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் திறன் கொண்ட கால்நடைத் தீவன ஆலையினை ரூ.50

கோடி மதிப்பீட்டில் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

- நபார்டு வங்கி நிதி 2023–24 தொகுப்பு – XXIX–ன் கீழ், கடலூர் மாவட்டம் திட்டக்குடியில் நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் திறன் கொண்ட கால்நடைத் தீவன ஆலையினை ரூ.33 கோடி மதிப்பீட்டில் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

- நபார்டு வங்கி நிதி 2024–25 தொகுப்பு – XXX–ன் கீழ் ரூ.30 கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகர பால்பண்ணைகளான சோழிங்கநல்லூர், அம்பத்தூர், மாதவரம் மற்றும் ஒன்றியங்களான கோயமுத்தூர், சேலம், மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் தானியங்கி பால் பாக்கெட்கள் தயாரிக்கும் இயந்திரங்கள் (Automatic milk pouch stacking and conveyor system) நிறுவும் பணிகள் துவங்கப்படவுள்ளது.

## 9.3 பால்பண்ணை உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (DIDF)

- சென்னையின் அதிகரித்து வரும் பால் தேவையை பூர்த்தி செய்ய பால்பண்ணை உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் கடன் பெற்று நாளொன்றிற்கு 10 இலட்சம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட புதிய பால் பண்ணையை மாதவரத்தில் நிறுவும் பணி நடைப்பெற்று வருகிறது. (ரூ.14218.68 இலட்சம்). இத்திட்டம் வரும் பிப்ரவரி 2026 முதல் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.
- டெல்டா மாவட்டங்களின் பால் மற்றும் பால் பொருட்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தஞ்சாவூரில் நாளொன்றிற்கு 1 இலட்சம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட புதிய பால் பண்ணையை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது (ரூ.5355 இலட்சம்). இத்திட்டம் வரும் ஏப்ரல் 2025 முதல் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

- திருச்சி மாவட்ட ஒன்றியத்தின் வருவாயை அதிகரிக்க, கூடுதலாக தரமான, மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்களை உற்பத்தி செய்து நுகர்வோருக்கு வழங்கும் வகையில் நாளொன்றிற்கு 6000 லிட்டர் ஐஸ்கிரீம் தயாரிப்பு ஆலை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது (ரூ.4341.56 இலட்சம்). இத்திட்டம் வரும் செப்டம்பர் 2024 முதல் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.
- தூத்துக்குடி மாவட்ட நுகர்வோரின் பால் தேவையை முழுமையாக பூர்த்தி செய்ய தூத்துக்குடியில் நாளொன்றிற்கு 50 ஆயிரம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட புதிய பால் பண்ணையை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது (ரூ.4665.77 இலட்சம்). இத்திட்டம் வரும் அக்டோபர் 2024 முதல் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

## 9.4 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி (SBGF)

- தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களின் பின் தங்கிய பகுதிகளை வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்ல மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி வழங்கப்படுகிறது. பின் தங்கிய, ஈரோடு மாவட்ட மலை பகுதிகளுக்கு தேவைப்படும் திட்டங்கள் கண்டறியப்பட்டு 7 எண்ணிக்கையிலான சூரிய சக்தி மூலம் பால் கேன்கள் குளிரூட்டும் வசதிக்கான நிதி மாநில திட்டகுழுவின் மூலம் ரூ.49.39 இலட்சம் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 9.5 பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PMFME)

- உணவு பதப்படுத்தும் தொழிலில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு பொது உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் பொருட்டு ஒன்றிய அரசு நிதி உதவி வழங்குகிறது. இத்திட்டத்தின் மூலம் 35% கடன்

மூலதனம் மானியமாக ரூ.3 கோடி வரை அதிகபட்ச உச்ச வரம்பாக வழங்கப்படுகிறது.

- இத்திட்டத்தின் கீழ் தருமபுரி ஒன்றியத்தில் ரூ.229.96 இலட்சம் மதிப்பீட்டில் 50 ஆயிரம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட பால்பண்ணை நிறுவுவதற்கான பணிகள் முடிவுற்று ஆகஸ்ட் 2024 முதல் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.
- திருவண்ணாமலை ஒன்றியத்தில் ரூ.284.88 இலட்சம் மதிப்பீட்டில் 50 ஆயிரம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட பால்பண்ணை நிறுவுவதற்கான பணிகள் முடிவுற்று ஆகஸ்ட் 2024 முதல் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.
- கரூர் ஒன்றியத்தில் ரூ.229.96 இலட்சம் மதிப்பீட்டில் 50 ஆயிரம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட பால்பண்ணை நிறுவுவதற்கான பணிகள் முடிவுற்று ஆகஸ்ட் 2024 முதல் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

- கடலூர் ஒன்றியத்தில் ரூ.444.60 இலட்சம் மதிப்பீட்டில் 50 ஆயிரம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட பால்பண்ணை நிறுவுவதற்கான பணிகள் முடிவுற்று செப்டம்பர் 2024 முதல் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.
- அச்சரபாக்கத்தில் ரூ.999.90 இலட்சம் மதிப்பீட்டில் 1 இலட்சம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட பால் பண்ணை உட்கட்டமைப்பு திட்டத்திற்கான உரிய ஆணைகள் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 9.6. தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம் (TANII)

- எருமை வளர்ப்பை ஊக்குவிக்க "எருமை கன்று வளர்ப்பு திட்டம்" மற்றும் பாலினம் பகுக்கப்பட்ட உறைவிந்து குச்சி கொண்டு செயற்கை முறை கருவூட்டல் பணிக்கு ரூ.820.62 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்ட நிதியின் மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் ஈரோடு, திருப்பூர்,

திருச்சி, கரூர், சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, தருமபுரி, காஞ்சிபுரம், திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் கடலூர் ஆகிய 12 மாட்டங்களில் 2000 எண்ணிக்கையிலான எருமை கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் எருமை பால் உற்பத்தி அதிகரித்து பால் உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் வருவாய் பெறுவதன் மூலம் அவர்களின் பொருளாதாரம் மேம்படும்.

- ரூ.141.11 இலட்சம் மதிப்பீட்டில் 20 எண்ணிக்கையிலான சூரிய சக்தி மூலம் பால் கேன்களை குளிர்விக்கும் இயந்திரங்கள் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க அளவில் நிறுவும் பணிகள் இத்திட்டத்தின் மூலம் நடைபெற்று வருகின்றன.

## 9.7. சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம் (SADP)

- சிறப்பு பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் 7 ஏக்கர் பரப்பளவில் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம்

பால் குளிரூட்டும் மையத்தில் ரூ.6.72 கோடி மதிப்பீட்டில் பசுந்தீவன ஊறுகாய் புல் கட்டுகள் உற்பத்தி செய்யும் ஆலை நிறுவிட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- பருவ மழை காலத்தில் கிடைக்கும் உபரியான பசுந்தீவன புற்களை பதப்படுத்தி பசுந்தீவன ஊறுகாய் புல் கட்டுகள் வடிவில் பாதுகாப்பதன் மூலம் கோடை மற்றும் பருவ மழை பொய்க்கும் காலங்களில் ஏற்படும் பசுந்தீவன தேவையை பூர்த்தி செய்யலாம்.
- ஊட்டச்சத்து நிறைந்த பசுந்தீவன ஊறுகாய் புல் கறவை மாடுகளுக்கு வழங்குவதன் மூலம் பாலின் அளவு மற்றும் தரம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

## 9.8. தேசிய பசுக்கள் இயக்கம் (RGM) – மரபுவழி சோதனை திட்டம்.

- தேசிய பசுக்கள் இயக்கம் – மரபுவழி சோதனை திட்டம் வேலூர், ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள்

கூட்டுறவு ஒன்றியங்களில் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் சிறந்த மரபியல் திறன் உள்ள பொலிகாளைகளை உற்பத்தி செய்தல். இத்திட்டத்திற்காக ரூ.2087.51 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

- களவெளி செயல்திறன் பதிவு திட்டத்தின் மூலம் 225 சிறந்த மரபியல் திறன் உள்ள பொலிகாளை கன்றுகளை உற்பத்தி செய்யும் நோக்கோடு செயல்படுத்தப்பட்டு இதுவரை 246 பொலிகாளை கன்றுகள் பெறப்பட்டுள்ளன. மேலும் இலக்காக நிர்ணயிக்கப்பட்ட 180 பொலிகாளைகளில் 169 பொலிகாளை கன்றுகள் தமிழகத்தில் உள்ள பொலிகாளை பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது 77 பொலிகாளைக் கன்றுகள் வளர்ப்பில் உள்ளன.

**மலட்டுத் தன்மையை நீக்கும் முகாம்கள்**

- இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின் கீழ் 2023–24 ஆம் ஆண்டில் 100 மலட்டுத் தன்மையை நீக்கும் முகாம்கள் நடத்தப்பட்டு இதன் மூலம் 20–30% இனப்பெருக்க திறனுள்ள கறவை மாடுகளுக்கு மலட்டுத்தன்மை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

**புத்தறிவு பயிற்சிகள்**

- பால் உற்பத்தியாளர்களுக்கு கறவைகளின் ஆரோக்கியம் மற்றும் இனப்பெருக்க மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 200 புத்தறிவு பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதன் மூலம் ஒவ்வொரு பயிற்சி வகுப்பிலும் 30–க்கு மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள் பயிற்சி பெற்று பயனடைந்தனர்.

**கன்று பேரணி**

- அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலும் உள்ள பால்

உற்பத்தியாளர்களுக்கு கலப்பின கிடாரி கன்று வளர்ப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கும், பால் உற்பத்தியாளர்களை கன்று வளர்ப்பில் ஊக்குவிப்பதற்கும் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் 50 கன்று பேரணிகள் நடத்தப்பட்டுள்ளது.

**ஊட்டி நியூக்ளியஸ் ஜெர்ஸி பொலிகாளை பண்ணையின் உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துதல்**

- ஊட்டியில் உள்ள பொலிகாளை பண்ணைக்கு மைய அரசின் தரநிர்ணய முகமை A Grade இவ்வாண்டு (2023–24) வழங்கியுள்ளது. மேலும் இப்பண்ணை, இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டம் மூலம் ஒன்றிய அரசின் குறைந்தபட்ச தர நிர்ணய நெறிமுறைகள் அடிப்படையில், உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரூ.546.92 இலட்சம் நிதியுதவி தேசிய பசுக்கள் இயக்கத்தின் கீழ் பெறப்பட்டு கட்டிடங்களை புதுப்பிக்கவும் பல்வேறு வகையான ஆய்வக

உபகரணங்கள், பண்ணை கருவிகள் மற்றும் இணைய வழி கருவிகளும் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

### 9.9. தேசிய கால்நடை இயக்கம் (NLM)

ஒன்றிய அரசின் தேசிய கால்நடை இயக்கம் மூலம் கால்நடை காப்பீடு திட்டம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பால் உற்பத்தியாளர்களின் மாடுகள் திடீரென்று இறந்து போகும் நிலையில் அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்காகவும், உற்பத்தியாளர்கள் பால் உற்பத்தி தொழிலில் தொடர்ந்து ஈடுபடவும் இத்திட்டம் உதவுகிறது. இத்திட்டத்தின் கீழ் பால் உற்பத்தியாளர்களின் கறவைகளுக்கு காப்பீடு வழங்க வறுமை கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கு மொத்த காப்பீட்டுத் தொகையில் 50 சதவீத மானியமும், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு 70 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

2022–23 ஆம் ஆண்டு, இத்திட்டத்தின் இலக்கான 1.07 இலட்சம் கறவைகளின் காப்பீடிற்கு, 27 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களை சார்ந்த 1.16 இலட்சம் கறவை பசுக்களுக்கு ஆவின் நிறுவனத்தின் மூலம் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டிற்கு தமிழ்நாடு முழுவதும் 5 இலட்சம் கறவை மாடுகளுக்கு தேசிய கால்நடை இயக்கம் 2023–24 திட்டத்தின் மூலம் காப்பீடு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 9.10. தேசிய செயற்கைமுறை கருவூட்டல் திட்டம் (NAIP)

ஒன்றிய அரசின் தேசிய கால்நடை இயக்கம் மூலம் தேசிய செயற்கைமுறை கருவூட்டல் திட்டம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 10 மாவட்ட ஒன்றியங்களில், செயற்கை முறை கருவூட்டல் வசதிகள் 50 சதவீதத்திற்கும் குறைவாக உள்ள 12 மாவட்டங்களான கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை,

உதகமண்டலம், திருவண்ணாமலை, திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகியவற்றில் செயல்படுத்தப்படுகிறது.

கிராமபுறங்களில் உள்ள பசு மற்றும் எருமையினங்களின் உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்காக சிறந்த மரபியல் திறனுள்ள பொலிகாளைகளின் உறைவிந்து குச்சிகளை செயற்கைமுறை கருவூட்டல் மூலம் பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு இனப்பெருக்கம் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதுவரை இத்திட்டத்தின் முதல் மூன்று கட்டங்கள் முடிவுற்று, நான்காம் கட்டம் தற்போது நடைபெற்றுவருகிறது.

**கறவை மாடுகளின் சினை முட்டை வெளியேறும் நேரத்தை ஒருங்கிணைக்கும் தொழிற்நுட்பத்துடன், பாலினம் பகுக்கப்பட்ட உறைவிந்து குச்சிகளை பயன்படுத்துதல்.**

கறவை மாடுகளின் இனப்பெருக்கத்தினை மேம்படுத்த, சினை முட்டை வெளியேறும் நேரத்தை ஒருங்கிணைக்கும் தொழிற்நுட்பத்துடன், பாலினம்

பகுக்கப்பட்ட உறைவிந்து குச்சிகளை பயன்படுத்தி கறவை மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யும் திட்டம் அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் 500 கறவை மாடுகளில் முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் கிடாரி கன்றுகளை அதிக அளவில் பெறுவதுடன், கறவை மாடுகளின் ஒரு ஈற்றிற்கும், அடுத்த ஈற்றிற்கும் உள்ள இடைவெளியை வெகுவாக குறைத்து தொடர் பால் உற்பத்தியை உறுதி செய்ய இயலும்.

**9.11. பசுந்தீவன வளர்ப்பு**

கறவை மாடுகளுக்கு அடர்தீவனம் மற்றும் உலர்தீவனம் ஆகியவற்றுடன் பசுந்தீவனம் ஆண்டு முழுவதும் வழங்குவது, பால் உற்பத்தி, இனப்பெருக்க திறன் மற்றும் ஆரோக்கிய நிலையை பராமரிக்க இன்றியமையாததாகும்.

தேசிய கால்நடை இயக்கத்தின் (NLM) கீழ் தர சான்று பெற்ற தீவன புல் விதைகள் உற்பத்தி

தொடர்பான பயிற்சி ஈரோட்டில் உள்ள தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் சேலம் ஒன்றிய பயிற்சி நிலையத்தின் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் இத்திட்டத்தின் மூலம் தேசிய விதை கழகம் மூலம் உற்பத்தி செய்யப்படும் புல் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் பயிற்சியின் போது வழங்கப்பட்டுள்ளது.

தாட்கோ திட்டத்தின் கீழ் ரூ.1 கோடி மதிப்பீட்டில் 1000 பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு தீவனப்புல் விதைகள் வழங்கப்பட்டது.

**10. மின் ஆளுமை நடவடிக்கைகள்**

**10.1. IDMS– Integrated Dairy Management System**

ஆவின் பால் பண்ணை அலுவலக பணிகளை ஒருங்கிணைக்கும் பணிகளுக்காக மென்பொருட்களை உருவாக்க ஒன்றிய அரசின் மின்னணு தகவல் தொழில் நுட்ப துறையின் நிதி

உதவியுடன் IDMS உருவாக்கப்பட்டது. நிறுவன வள திட்டமிடல் மென்பொருள் மூலம் இணையத்தின் அனைத்து அலகுகள், அலுவலகங்கள் மற்றும் கிருஷ்ணகிரி, ஈரோடு, மதுரை, சேலம் மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கங்கள், தொகுப்பு குளிர்விப்பு மையங்கள், பால் பண்ணை பணிகள் கணினி மயமாக்கப்பட்டது.

இத்திட்டப்பணிகள் மூலம் செயல் திறன், வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை மற்றும் உரிய நேரத்திற்குள் அலுவலகப் பணிகள் முடிக்கப்படும்.

ஆவின் பால் பண்ணை அலுவலக பணிகளை ஒருங்கிணைக்கும் மென்பொருட்களை மீதமுள்ள மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் பயன்படுத்தும் வகையில் மாற்றம் செய்து விரிவுபடுத்தப்படும்.

## 10.2 பயோ–மெட்ரிக் வருகை முறை

பயோமெட்ரிக் வருகை முறை இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் அனைத்து அலகுகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## 10.3 தமிழ்நாடு–டெண்டர் போர்ட்டல் – ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளி கோருவது நடைமுறைப்படுத்துதல்

திட்ட பணிகளைச் செயல்படுத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளி (Tender) கோருவது மற்றும் பல்வேறு சேவைகள்/பொருட்களை வாங்குவது TN–Tender Portal மூலம் இணையவழியில் மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் முன் வைப்புத் தொகை இணையவழியில் பெறப்படுகிறது. இம்முறையை பின்பற்றுவதன் மூலம் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதுடன் ஒப்பந்தம் கோருவதில் போட்டியினை அதிகரித்தல், நேரம் மற்றும் பண விரயத்தினை வெகுவாக குறைக்க உதவுகிறது.

## 11. பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள்

### 11.1. பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதி

பால் உற்பத்தியாளர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு அளிக்கும் நோக்கில் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர் நல நிதி உருவாக்கப்பட்டது. இதற்கு பால் ஊற்றும் ஒவ்வொரு உறுப்பினரும் மாதந்தோறும் ஒரு ரூபாயும், சம்பந்தப்பட்ட தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தலா 50 பைசாவும் பங்களிக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகைகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | நிதி உதவி | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | விபத்து மரணம் | 2,50,000 |
| 2 | இரண்டு குழந்தைகள் வரை கல்வி உதவி | 25,000 |
| 3 | பெண் குழந்தைகளுக்கான திருமண உதவி | 30,000 |
| 4 | இறப்பு நேரிட்டால் இறுதிச் சடங்கு செலவுகள் | 5,000 |
| 5 | ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்புகளின் இழப்பு | 1,75,000 |
| 6 | ஒரு உறுப்பு இழப்பு | 75,000 |

இதுவரை 600 பயனாளிகளுக்கு ரூ.6.28 கோடி உதவித் தொகையாக இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு

| வ. எண் | நிதி உதவி | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட மொத்த தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | இறப்பு மற்றும் உறுப்பு இழப்பு | 287 | 5,86,56,855/- |
| 2 | கல்வி உதவி | 120 | 21,55,000/- |
| 3 | பெண் குழந்தைகளின் திருமணம் | 55 | 13,30,000/- |
| 4 | இறுதிச் சடங்கு செலவுகள் | 138 | 6,90,000/- |
| மொத்தம் | | | 6,28,31,855/- |

2023-24 ஆம் நிதியாண்டில் 80 பயனாளிகளுக்கு ரூ.1.11 கோடி இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

## 11.2 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க அளவில் பால் உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் ஆதரவு விலை வழங்குதல்

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு அவர்கள் வழங்கும் பாலின் மதிப்புக்கு ஏற்ப பங்கு ஈவுத்தொகை, கூடுதல் ஆதரவு விலை மற்றும் போனஸ் ஆகியவை சங்கங்கள் ஈட்டும் லாபத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

2023–24 ஆம் ஆண்டில், சங்க உறுப்பினர்களுக்கு கூடுதல் ஆதரவு விலை ரூ.3,956.49 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | சரகத்தின் பெயர் | மாவட்டத்தின் பெயர் | போனஸ் | | | பாலுக்கான ஆதரவு விலை | | | ஈவுத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 1 | திருவள்ளூர் | திருவள்ளூர் | 2 | 208 | 2.56 | 1 | 72 | 2.73 | 2 | 208 | 0.003 |
| 2 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | 2 | 427 | 6.19 | 0 | 0 | 0.00 | 0 | 0 | 0.000 |
| | | செங்கல்பட்டு | 11 | 1356 | 39.00 | 0 | 0 | 0.00 | 0 | 0 | 0.000 |
| 3 | வேலூர் | வேலூர் | 16 | 2399 | 30.84 | 6 | 1720 | 31.88 | 16 | 3218 | 0.193 |
| | | இராணிப்பேட்டை | 10 | 1340 | 15.68 | 7 | 5578 | 84.35 | 10 | 3989 | 0.558 |
| | | திருப்பத்தூர் | 2 | 390 | 7.07 | 0 | 0 | 0.00 | 2 | 741 | 0.165 |
| 4 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 20 | 2946 | 50.16 | 0 | 0 | 0.00 | 6 | 473 | 0.511 |
| 5 | விழுப்புரம் | விழுப்புரம் | 7 | 1674 | 11.48 | 2 | 1286 | 29.61 | 1 | 378 | 1.220 |

| வ.எண் | சரகத்தின் பெயர் | மாவட்டத்தின் பெயர் | போனஸ் | | | பாலுக்கான ஆதரவு விலை | | | ஈவுத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) |
| | | கள்ளக்குறிச்சி | 39 | 9241 | 159.57 | 1 | 435 | 4.00 | 29 | 13451 | 12.630 |
| 6 | கடலூர் | கடலூர் | 5 | 1434 | 28.95 | 0 | 0 | 0.00 | 3 | 341 | 0.007 |
| 7 | கோயமுத்தூர் | கோயமுத்தூர் | 58 | 5369 | 78.29 | 11 | 607 | 22.16 | 58 | 5369 | 0.220 |
| 8 | ஈரோடு | ஈரோடு | 150 | 16608 | 296.21 | 29 | 3990 | 67.80 | 119 | 27894 | 0.429 |
| 9 | திருப்பூர் | திருப்பூர் | 25 | 962 | 48.52 | 19 | 2605 | 102.18 | 25 | 962 | 0.100 |
| 10 | தருமபுரி | தருமபுரி | 34 | 3606 | 82.35 | 2 | 266 | 20.15 | 34 | 5316 | 0.074 |
| 11 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | 16 | 3439 | 27.12 | 3 | 2056 | 71.21 | 1 | 2013 | 0.489 |
| 12 | கரூர் | கரூர் | 27 | 2521 | 36.50 | 23 | 2019 | 65.04 | 27 | 2521 | 0.071 |
| 13 | திருச்சி | திருச்சி | 58 | 10096 | 111.12 | 19 | 6278 | 295.59 | 58 | 10096 | 0.140 |
| 14 | அரியலூர் | அரியலூர் | 5 | 2935 | 15.88 | 5 | 9992 | 137.96 | 1 | 1145 | 0.016 |
| 15 | பெரம்பலூர் | பெரம்பலூர் | 11 | 2590 | 54.90 | 44 | 9819 | 288.36 | 4 | 628 | 0.043 |
| 16 | திண்டுக்கல் | திண்டுக்கல் | 3 | 365 | 7.31 | 10 | 3466 | 119.08 | 0 | 0 | 0.000 |
| 17 | மதுரை | மதுரை | 0 | 0 | 0.00 | 3 | 806 | 18.93 | 0 | 0 | 0.000 |
| 18 | தேனி | தேனி | 2 | 173 | 3.72 | 0 | 0 | 0.00 | 0 | 0 | 0.000 |
| 19 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 1 | 157 | 1.08 | 5 | 2155 | 27.75 | 0 | 0 | 0.000 |
| 20 | திருவாரூர் | திருவாரூர் | 0 | 0 | 0.00 | 3 | 13190 | 98.48 | 0 | 0 | 0.000 |
| | | நாகப்பட்டினம் | 0 | 0 | 0.00 | 0 | 0 | 0.00 | 0 | 0 | 0.000 |
| | | மயிலாடுதுறை | 1 | 887 | 1.69 | 1 | 483 | 2.88 | 1 | 837 | 0.230 |
| 21 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 2 | 445 | 2.54 | 1 | 360 | 11.26 | 1 | 572 | 8.400 |
| 22 | சேலம் | சேலம் | 116 | 14324 | 316.73 | 60 | 14140 | 384.00 | 116 | 14324 | 0.205 |
| 23 | நாமக்கல் | நாமக்கல் | 10 | 1016 | 9.42 | 12 | 1948 | 53.78 | 10 | 1016 | 0.359 |
| 24 | மானாமதுரை | சிவகங்கை | 1 | 150 | 2.28 | 8 | 2627 | 47.69 | 0 | 0 | 0.000 |
| 25 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 2 | 1538 | 21.42 | 0 | 0 | 0.00 | 0 | 0 | 0.000 |
| 26 | நீலகிரி | நீலகிரி | 0 | 0 | 0.00 | 8 | 757 | 36.80 | 0 | 0 | 0.000 |
| 27 | திருநெல்வேலி | திருநெல்வேலி | 4 | 1068 | 13.28 | 9 | 3602 | 186.60 | 0 | 0 | 0.000 |

| வ.எண் | சரகத்தின் பெயர் | மாவட்டத்தின் பெயர் | போனஸ் | | | பாலுக்கான ஆதரவு விலை | | | ஈவுத்தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) | சங்கங்களின் எண்ணிக்கை | பயனடைந்த உறுப்பினர்கள் | தொகை (இலட்சத்தில்) |
| | | தென்காசி | 1 | 176 | 1.31 | 3 | 855 | 27.50 | 0 | 0 | 0.000 |
| | | கன்னியாக்குமரி | 13 | 2349 | 37.67 | 5 | 1470 | 36.80 | 14 | 2763 | 0.039 |
| 28 | தூத்துக்குடி | தூத்துக்குடி | 0 | 0 | 0.00 | 2 | 1000 | 25.57 | 0 | 0 | 0.000 |
| 29 | விருதுநகர் | விருதுநகர் | 0 | 0 | 0.00 | 4 | 1520 | 109.43 | 0 | 0 | 0.000 |
| | | **Total** | **654** | **92189** | **1520.83** | **306** | **95102** | **2409.56** | **538** | **98255** | **26.102** |

## 11.3. பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடை உள்ளீட்டு சேவைகள்

இத்துறை மூலம் கீழ்க்காணும் இடுபொருள் சேவைகள் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

- கால்நடை சிகிச்சை மற்றும் அவசர கால சிகிச்சை
- உயர் மரபியல் திறன் கொண்ட உறைவிந்து குச்சிகளை கொண்டு செயற்கைமுறை கருவூட்டல் சேவைகள்
- மலட்டு நீக்க சிகிச்சை முகாம்
- சினைதருண அறிகுறிகளை ஒருங்கிணைத்தல் திட்டம்
- கறவையின காப்பீடு
- பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால்

உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி

- தரமான கால் நடை தீவனம் மற்றும் தாது உப்பு கலவை வழங்குதல்
- தரமான தீவன புல் மற்றும் விதைகளை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குதல்
- பால் உற்பத்தியாளர்களுக்கு வங்கிகள் மூலம் நடைமுறை மூலதன கடன் வழங்குதல்
- இரத்த ஒட்டுண்ணிகளால் ஏற்படும் நோய் மற்றும் மடிவீக்க நோயை தடுப்பதற்கு தடுப்பு மருந்துகள் விநியோகம் செய்தல்

12. பணியாளர் நலன்

1. 2023-24 ஆம் ஆண்டு கருணைத் தொகையாக ரூ.587 இலட்சம் இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் 4,107 பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2. 2023-24 ஆம் ஆண்டு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக ரூ.36.90 இலட்சம் இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால்

உற்பத்தியாளர் ஒன்றியங்களின் 3972 பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

3. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் தினந்தோறும் அரை லிட்டர் பால் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

4. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் மற்றும் இணையத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.4,500 ஓய்வூதியத் தொகையாகவும் மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை குடும்ப ஓய்வூதியமாக ரூ.2,250 வழங்கப்பட்டு வருகிறது.

5. குடும்ப பாதுகாப்பு நிதி, 10.07.2023 முதல் மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்கள் இறக்க நேரிட்டால்

அவர்களின் குடும்பத்திற்கு ரூ.50,000/- வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 13. நிலையான அபிவிருத்திக்கான நோக்கங்கள்

2015-ம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் ஏற்றுக் கொண்ட 2030 ஆம் ஆண்டிற்குள் செய்யப்படவேண்டிய வளர்ச்சி குறித்த இலக்குகள் பற்றிய முன்மொழிவுகள், தற்போதும் எதிர் காலத்திலும், மக்களுக்கும் அனைத்து உலக நாடுகளுக்கும் அமைதி மற்றும் செழிப்புக்கான பகிரப்பட்ட செயல்திட்டத்தை வழங்குகிறது. வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கு 17 குறிக்கோள்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பால்வளத்துறையானது, வளங்குன்றா வளர்ச்சி குறிக்கோள் எண்.2.0ன்படி பட்டினியை ஒழித்தல், உணவு பாதுகாப்பை அடைதல், ஊட்டச்சத்து மேம்பாட்டை எய்துதல் மற்றும் நிலையான வளங்குன்றா வேளாண்மையை ஊக்குவித்தல் ஆகியவற்றோடு தொடர்புடையதாகும். மேலும்,

இத்துறையானது, இலக்கு எண்.2.3 மற்றும் 2(அ) அடைவதற்கு திட்டமிட்டுள்ளது.

குறிக்கோள் 2.3: 2030–ஆம் ஆண்டிற்குள் கிராமப்புறங்களில் சிறிய அளவில் உணவு உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் குறிப்பாக பெண்கள், பழங்குடியினர், விவசாயத் தொழிலையே வாழ்வாதாரமாக செய்கின்ற குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கறவை மாடுகள் வளர்ப்போருக்கு தங்களுடைய வருட வருமானத்தை இரட்டிப்பாக்கும் நோக்கத்துடன் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப அறிவு, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அனைத்து பொருட்களையும் சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகும். மேலும், மதிப்பு கூட்டிய பொருட்கள் உற்பத்திக்கு தேவையான வசதிகளை அதிகரித்தல் மூலம் கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த வேலை வாய்ப்புகள் உருவாக்குதல் ஆகும்.

குறிக்கோள் 2(அ): வளரும் நாடுகளில் மற்றும் குறிப்பாக குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில்

விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக கிராமப்புற உட்கட்டமைப்பு, விவசாய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க பணிகள், விவசாய பயிர்கள் மற்றும் கால்நடை மரபணு வங்கிகளில் மேம்பட்ட சர்வதேச ஒத்துழைப்பு மூலம் முதலீட்டை அதிகரித்தல்.

இத்துறையானது, அரசாணை (நிலை) எண்.184, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, நாள். 26.12.2019–ன்படி நிலையான அபிவிருத்திக்கான நோக்கங்களை எய்துவதற்காக குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவானது, திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு துறை, மாநில மற்றும் மாவட்ட களப் பணியாளர்கள் மற்றும் இதர வளங்குன்றா வளர்ச்சித் திட்ட குழுக்களுடன் இணைந்து செயல்படும். இவ்வாறாக பல்வேறு திட்டங்கள் மூலம் பால்வளத்துறையானது, வளர்ச்சி திட்டங்களை எய்த திட்டமிட்டுள்ளது.

## 14. புதிய முயற்சிகள் மற்றும் நிறைவேற்றப்பட்ட சட்டமன்ற அறிவிப்புகள்

பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும் மற்றும் இடுபொருள்களின் விலை உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பால் கொள்முதல் விலையை பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.3/– உயர்த்தி, ரூ.32/– லிருந்து ரூ.35/– ஆகவும் மற்றும் எருமைப் பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.3/–உயர்த்தி, ரூ.41/– லிருந்து ரூ.44/– ஆகவும் 5.11.2022 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

- மேலும் பால் உற்பத்திக்கான செலவு அதிகமானதை கருத்தில் கொண்டு பால் உற்பத்தியாளர்கள் நலன் கருதி பசும்பால் மற்றும் எருமைப்பால் லிட்டர் ஒன்றிற்கு ரூ.3/– வீதம் ஊக்கத்தொகை 18.12.2023 முதல் வழங்கப்பட்டு வருகிறது.
- 2023–24 ஆம் நிதியாண்டில் 289 புதிய பிரதம பால் உற்பத்தியாளர் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டது. 84 செயலிழந்த சங்கங்கள் புதுத்துயிரூட்டப்பட்டு உள்ளன.

- தரமான பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை வழங்கப்படுவதை உறுதி செய்திட பால் தரப்பரிசோதனை செய்யப்படுவது அனைத்து சங்கங்களிலும் மற்றும் அனைத்து நிலைகளிலும் படிப்படியாக நடைமுறை செய்யப்பட்டு வருகிறது. நாளது தேதி வரை 4,018 சங்கங்களில் உடனடி ஒப்புகைச் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.

- பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உள்ள கணக்குப்பதிவேடுகள் மற்றும் இதர பதிவேடுகளை எளிதாக பராமரிக்கவும், அனைத்து சங்கங்களிலும் ஒருமித்த மாதிரி பதிவேடுகள் பராமரிக்க ஏதுவாகவும், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உள்ள அனைத்துப் பதிவேடுகளும் கணிணிமயமாக்கப்பட்டு வருகிறது.

- பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் இலாபத்தினை அதிகரித்திட ஏதுவாக அனைத்து

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களையும் பால் மற்றும் பால் உபபொருட்கள் மொத்த விற்பனையாளர்களாக நியமனம் செய்யப்பட்டு உள்ளது. அவர்களுக்கு கிடைக்கப்பெறும் விற்பனை விளிம்புத் தொகையின் விவரம் பின்வருமாறு:

| விற்பனை விளிம்புத் தொகை | பணியாளர்கள் | சங்கங்கள் |
|---|---|---|
| சாதாரண விற்பனை | 60% | 40% |
| சிறப்பு விற்பனை | 75% | 25% |

- பொது மக்கள் மற்றும் நுகர்வோர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகளுக்கு ஏற்ப பேக்கிங் முறை மற்றும் புதிய தரமான பால் பொருட்களை தயாரிக்கவும் பேக்கிங் பொருட்களின் தரத்தினை பரிசோதிக்கவும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகம் (Research and Development Lab) ரூ.11.58 கோடி மதிப்பில் அம்பத்தூரில் நிறுவப்படவுள்ளது.
- 4,018 எண்ணிக்கையில் பால் பகுப்பாய்வு இயந்திரங்கள் மாவட்ட

கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலுள்ள சங்கங்களில் நிறுவப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு ஒப்புகைச்சீட்டு உடனக்குடன் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இவ்வாண்டு 2804 எண்ணிக்கையிலான பால் பகுப்பாய்வு இயந்திரங்கள் நிறுவப்படவுள்ளன.

**14.1. புதிய பால் பண்ணைகள் உருவாக்கம்**

- நாளொன்றுக்கு ஆறு இலட்சம் லிட்டர் பாலை கையாளும் திறன் கொண்ட புதிய பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை பாடாலூர், திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது. இதன் மூலம் தனியார் பால் பண்ணை நிறுவனங்களில் பால் பவுடர் மற்றும் வெண்ணெய் உருமாற்றம் செய்வது தவிர்க்கப்படும்.

- புதிய 2 இலட்சம் லிட்டர் திறனுள்ள பால்

பண்ணையினை பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் ரூ.39 கோடி மதிப்பீட்டில் அச்சிரப்பாக்கத்தில் நிறுவுவது மூலம் சென்னை புறநகர் நுகர்வோர்களின் பால் தேவையினை பூர்த்தி செய்ய முடியும்

- புதிய 2 இலட்சம் லிட்டர் திறனுள்ள பால் பண்ணை மற்றும் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை பிரதம மந்திரி கிசான் சம்பதா யோஜனா – உணவு பதப்படுத்தும் தொழிற்துறை அமைச்சக திட்டத்தின் கீழ் ரூ.89.28 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் மாவட்டத்தின் தேவையை பூர்த்தி செய்ய நிறுவப்பட்டு வருகிறது

- பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு 50 ஆயிரம் திறன் கொண்ட புதிய பால் பண்ணை நிறுவுவதற்கான உட்கட்டமைப்பு

வசதிகள் கடலூர், கரூர், தருமபுரி மற்றும் திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களில் தொடங்கப்பட்டுள்ளது

### 14.2. தற்போதைய பால்பண்ணைகளை நவீன மயமாக்குதல்

- நபார்டு வங்கி நிதி தொகுப்பு 2024–25 நிதியாண்டில் ரூ.60 கோடி உட்பட மொத்தம் ரூ.119.37 கோடி மதிப்பீட்டில் மதுரை, திருச்சி மற்றும் சேலம் மாவட்டங்களிலுள்ள பழைய பால் பண்ணைகளை அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்களுடைய பண்ணைகளாக நவீனமாக்குவதற்கு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

### 14.3. கறவை மாடு மேம்பாடு திட்ட பணிகள்

- சிறந்த மரபு திறன் கொண்ட கிடாரி கன்றுகளை வளர்ப்பதற்கான தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் சேலம் மாவட்டம் கருமந்துறை கிராமத்தில் உருவாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சிறந்த மரபு திறன் உள்ள

பொலிகாளைகள், மற்றும் சிறந்த மரபு திறன் உள்ள கிடாரி கன்றுகள் உற்பத்தி செய்து பால் உற்பத்தியாளர்களுக்கு விநியோகிக்கப்படும்

- உறைவிந்து குச்சிகளை அதிகமான எண்ணிக்கையில் சேமித்து வைக்க 5 இடங்களில் (ஈரோடு, திருவண்ணாமலை, நாமக்கல், திருப்பூர் மற்றும் நீலகிரி) தலா 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட திரவ நைட்ரஜன் சேமிக்கும் கலன்கள் (Silo) நிறுவப்பட்டது. இதன் மூலம் 15000 லிட்டர் திரவ நைட்ரஜன் கூடுதலாக சேமிக்கப்பட்டு வருகிறது
- இரண்டாவது கட்டமாக கறவை மாடுகளில் சினை தருண ஒருங்கிணைக்கும் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி நீண்ட காலமாக சினைக்கு வராத/சினை நிற்காத கறவை மாடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், கன்றுகள் பிறக்கும் இடைவெளி இத்திட்டத்தின் மூலம் குறைக்கப்படுகிறது

- 500 கறவை மாடுகளில் கருமுட்டை வெளிப்படுதல் ஒருங்கிணைக்கும் தொழில்நுட்பம் மற்றும் பாலின பகுக்கப்பட்ட உறைவிந்து குச்சிகளை பயன்படுத்தி செயற்கை முறை கருவூட்டல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**14.4. சிறந்த பால் உற்பத்தியாளர்களை கௌரவித்தல்.**

- மாவட்ட அளவில் அதிக அளவில் பால் வழங்கிய பால் உற்பத்தியாளர்களை சிறப்பிக்கும் பொருட்டு 124 பால் உற்பத்தியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர்களின் மூலம் குடியரசு தின விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது.

**14.5. நிர்வாக சீர்திருத்தம்**

- பால் உற்பத்தியினை அதிகரிக்க இரண்டு புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சியினை தலைமையிடமாக கொண்டு உருவாக்கப்பட்டு செயல்படுகிறது

- தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் உள்ள நேரடி நியமனத்திற்கான காலி பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்படும்
- கால்நடை தீவனம், தாது உப்புக் கலவை உற்பத்தி மற்றும் விநியோக பணிகளை கண்காணிக்க ஒருங்கிணைந்த கண்காணிப்பு மையம் இணைய தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு கால்நடை தீவனம், தாது உப்புக் கலவை விநியோகம் உறுதி செய்யப்படுகிறது
- பால் மற்றும் பால் பொருட்கள் விநியோகம் செய்கின்ற வாகனங்களில் GPS கருவி பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் உரிய நேரத்தில் விநியோகம் செய்யவும் மற்றும் போக்குவரத்தில் ஏற்படக்கூடிய

இழப்புகளை தவிர்க்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது

- ➢ பால் பண்ணைகள், பாலகங்கள், தொகுப்பு பால் குளிர்விப்பான் நிலையங்கள், அலுவலகங்கள் மற்றும் முக்கிய நிகழ்வுககள் கண்காணிப்பு கேமராவில் பதிவு செய்யப்பட்டு கண்காணித்து பணிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு வருகிறது.

## 15. நிதி ஒதுக்கீடு

பால்வளத்துறை கோரிக்கையின் கீழ், 2023-2024 நிதி ஆண்டிற்கான, வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாய் செலவினமாக ரூ.78.33 கோடியும், மூலதனச் செலவீனமாக ரூ.289.41 கோடியும், கடன் மற்றும் முன்பணமாக ரூ.225.00 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

## பால்வளத்துறை ஒரு பார்வை

| வ. எண் | பொருட்களை | மார்ச் 2024 வரையிலான விவரங்கள் |
|---|---|---|
| I | **பிரதம கூட்டுறவு சங்கங்கள்** | |
| 1 | பால் கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை | 9189 |
| 2 | 2023-24ம் ஆண்டில் துவங்கப்பட்ட பால் கூட்டுறவு சங்கங்கள் (எண்ணில்) | 289 |
| 3 | 2023-24ம் ஆண்டில் புத்துயிரூட்டப்பட்ட நலிவடைந்த சங்கங்கள் (எண்ணில்) | 84 |
| 4 | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 16.81 |
| 5 | பால் வழங்கும் உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 3.91 |
| 6 | சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 32.20 |
| II | **மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள்** | |
| 7 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை | 27 |
| 8 | ஒன்றியங்களில் பால் கொள்முதல் (சராசரியாக நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 28.30 |

| வ. எண் | பொருட்களை | மார்ச் 2024 வரையிலான விவரங்கள் |
|---|---|---|
| 9 | மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களிலுள்ள பால் பண்ணைகளின் எண்ணிக்கை | 18 |
| 10 | மாவட்ட ஒன்றியங்களிலுள்ள பால் பண்ணைகளின் பால் பதப்படுத்தும் திறன் (LLPD) | 30.13 |
| 11 | மாவட்ட ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 15.72 |
| 12 | மாவட்ட ஒன்றிய அளவிலான பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 424 |
| 13 | ஒன்றியங்களிலுள்ள பால் குளிருட்டும் நிலையங்கள் | 34 |
| 14 | பால் குளிர்விக்கும் நிலையத்தின் பால் குளிர்விக்கும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 14.67 |
| 15 | தொகுப்பு குளிர்விப்பு மையங்களின் எண்ணிக்கை | 786 |
| 16 | தொகுப்பு பால் குளிர்விப்பான் மையங்களின் பால் குளிர்விக்கும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 28.67 |
| **III** | **மாநில அளவில்** | |
| 17 | மாநில அளவில் இணையம் | 1 |
| 18 | இணையத்தின் பால்பண்ணைகள் எண்ணிக்கை | 6 |

| வ. எண் | பொருட்களை | மார்ச் 2024 வரையிலான விவரங்கள் |
|---|---|---|
| 19 | இணைய பால் பண்ணைகளின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 18.65 |
| 20 | சென்னையில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 14.53 |
| 21 | சென்னை மாநகர பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 199 |
| IV | **மற்றவை** | |
| 22 | பால் பவுடர் பண்ணைகளின் எண்ணிக்கை (ஈரோடு, சேலம், மதுரை, கிருஷ்ணகிரி மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையம்) | 5 |
| 23 | பால்பவுடர் உற்பத்தித்திறன் (மெ.டன்/நாள்) | 90 |
| 24 | வெண்ணெய் சேமிக்கும் திறன் (மெ.டன்) | 4,629 |
| 25 | பால் பவுடர் சேமிக்கும் திறன் (மெ.டன்) | 7,805 |

## 16. முடிவுரை

பால் உற்பத்தியானது ஊரக பொருளாதார மேம்பாட்டில் பெரும் பங்கு வகிக்கிறது. பால்வளத்துறையானது பால் உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் வழங்கும் பாலுக்கு உரிய விலை வழங்குவதினை உறுதி செய்வது மற்றும் பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான உள்ளீடு சேவைகள் வழங்குவது போன்ற நடவடிக்கைகள் மூலம் அவர்களது வாழ்வாதாரம் மேம்படுவதினை உறுதி செய்கிறது.

பால் உற்பத்தியாளர்களின் வருவாயினை அதிகரிக்க பாலின் தரப்பரிசோதனைக்கான உடனடி ஒப்புகைச் சீட்டு மற்றும் ஊக்கத்தொகை வழங்குதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் பால் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் பால் தங்கு தடையின்றி கிடைப்பதினை உறுதி செய்கின்றது.

அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களும் இலாபகரமாக செயல்படத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாக பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**த.மனோ தங்கராஜ்**
மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்